Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 223 | வியாழக்கிழமை 07 ஜூலை 2022 | ஆனி 23 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50



"அப்ப பந்தயம் போட்ட மாதிரி பிரதமர் பதவியை விட்டிட்டு ரணில் வீட்டுக்குப் போகப்போறாரோ? அதெல்லாம் சூடு, சுரணை உள்ள ஆக்கள் தானே செய்வினம்.."

## உரிமைகளை வெல்வதற்காக ஜூலை – 9 ஒன்றிணைவோம்!

### மூத்த சட்டத்தரணிகள் அழைப்பு

கொழும்பு, ஜூலை 7

உரிமைகளை வெல்வதற்காக, அரசமைப்பின் ஊடாகப் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி எதிர்வரும் 9ஆம் திகதி அனைவரும் ஒன்றிணைந்து போராட முன்வரவேண்டுமென்று மூத்த சட்டத்தரணிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

15

## தென்னை மரத்திலிருந்து வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

தென்னை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை, புலோலி மத்தியைச் சேர்ந்த ஆறுமுகம் நவரட்ணம்

15



## பண்ணைக் கடலில் முதியவரின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம், பண்ணைக் கடற்கரைப் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

12

## "நான் ரெடி!"

### ரணிலின் சவாலை ஏற்றார் அநுரகுமார

கொழும்பு, ஜூலை 7

குறுகிய காலத்துக்குள் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டு, நாட்டு நிலைமையை ஸ்திரப்படுத்துவதற்குத் தயார் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தெரிவித்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்

15

## கொரோனாத் தொற்றால் பெண் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 7

நாட்டில் கொரோனாத் தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

12



## பக்திபூர்வமாக நடைபெற்ற கேதீச்சரக் கும்பாபிஷேகம்!

மன்னார், ஜூலை 7

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்றுக் காலை பக்திபூர்வமாக நடைபெற்றது. திருக்கேதீச்சர ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜா கருணானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகப்

12

## எரிவாயுத் தட்டுப்பாடு ஓகஸ்ட் மாதம் நீங்கும்

### ரணில் ஆருடம்

கொழும்பு, ஜூலை 7

சமையல்எரிவாயுசிலிண்டர் தட்டுப்பாட்டை இந்த மாத இறுதிக்குள் அல்லது ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்

12

## நிதியமைச்சர் பதவியிலிருந்து உடன் விலகவேண்டும் ரணில்!

### தம்மிக்க பெரேரா வலியுறுத்து அரசாங்கத்துக்குள் குழப்பமா?

கொழும்பு, ஜூலை 7

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் பதவியில் இருந்து விலகவேண்டும். அவர் நாட்டைப்பெரும்இடரைநோக்கிக் கொண்டு செல்கின்றார். டொலர்

12

## மக்கள்நலன் திட்டத்தை குழப்ப முற்பட வேண்டாம்

### யாழ். வர்த்தக சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 6 லட்சத்து 50 ஆயிரம் மக்களின் உணவுத் தேவையைக் கருத்திற்கொண்டு எடுக்கும் முயற்சிகளுக்கு

15

## வாகனத்துக்குள் சிக்குண்டு 7 வயதுச் சிறுமி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரந்தனையில் நடந்த விபத்தில் 7 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

12

## அனைத்துக் கட்சி அரசாங்கம் 2ஆம் கட்டப் பேச்சில் முன்னேற்றம்

கொழும்பு, ஜூலை 7

அனைத்துக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக எதிரணிகளை ஒன்று திரட்டிப் பொது நிலைப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான இரண்டாம் சுற்றுப் பேச்சு நேற்று நடைபெற்ற

15

## கோத்தாபய பதவி விலகக்கோரி முற்றுகையிட்டுப் போராட்டம்!

### நீர்த்தாரை, கண்ணீர் புகைக்குண்டு வீச்சு ஹிருணிகா உட்பட 11 பேர் கைதாகி விடுதலை



கொழும்பு, ஜூலை 7

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலகவேண்டுமென்று வலியுறுத்தி, கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் நெருக்கடியை தீர்க்குமாறு கோரிக்கை!

## அலைபேசியில் கோத்தாபய உரையாடல்



**கொழும்பு, ஜூலை 7**

**எரிபொருள் நெருக்கடி நாளுக்குநாள் தீவிரமாகிவரும் நிலையில், எரிபொருள் நெருக்கடியைத் தீர்க்க உதவுமாறு ரஷ்ய அதிபர் புடினிடம் கோரிக்கை விடுத்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய.**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் தாம் மிகவும் பயனுள்ள தொலைபேசி உரையாடலை நடத்தியதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று தனது ருவிற்றரில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவிலேயே இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதாரச் சவால்களை முறியடிக்கும் வகையில், இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு உதவிகளை வழங்குமாறு ரஷ்ய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததை ஜனாதிபதி உறுதிசெய்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடிக்காக இலங்கை அரசாங்கம் பல்வேறுபட்ட சிறப்புக் குழுக்களையும் அமைச்சர்களை உள்ளடக்கிய குழுக்களையும் ரஷ்ய உட்பட பல நாடுகளுக்கு அனுப்பிய போதிலும் அந்த முயற்சிகள் சொல்லிக்கொள்ளும் படியான வெற்றியை வழங்காதநிலையில் தற்போது ஜனாதிபதியே புடினிடம் நேரடியாக உதவி கோரியுள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையால் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும், ஐக்கிய நாடுகள் சபையும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. எனினும், இந்தியா மிகவும் குறைந்த விலையில் (மானிய அடிப்படையில்) ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்து வருகின்றது. இந்தப் பொறிமுறையை இலங்கையும் பின்பற்ற வேண்டும் என்று அரசாங்கத்தைப் பலரும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சஜித்தின் குற்றச்சாட்டு தொடர்பில் உடன் விசாரணைகளை நடத்துக!

கொழும்பு, ஜூலை 7

விமான சேவைகள் அமைச்சுக்கும் தனியார் நிறுவனமொன்றுக்கும் இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டார்.

விமான சேவைகள் அமைச்சு தனியார் நிறுவனம் ஒன்றுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். இதையடுத்தே இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். (ம)

### விசாரணைகள் முடியும் வரையில்

## நிமால் சிறிபால டி சில்வா தற்காலிக பதவிவிலகல்!



கொழும்பு, ஜூலை 7

விமான சேவைகள் அமைச்சுக்கும் தனியார் நிறுவன மொன்றுக்கும் இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சஜித் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணை முடியும் வரையில் அமைச்சர் பதவியில் இருந்து விலகினார் நிமால் சிறிபால டி சில்வா.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுமுன்தினம் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விரைவான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ள நிலையிலேயே, விசாரணைகள் முடியும் வரை துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பதவியில் இருந்து தற்காலிகமாக விலகுவதற்கு நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்துள்ளார். (ம)

## இலங்கை மீது அதீத அக்கறை

### இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



புதுடில்லி, ஜூலை 7

தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதற்கு அவசியமான உதவிகளை இலங்கைக்கு வழங்கிவருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதுடில்லி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி தெற்காசியப் பிராந்தியம் மீதும், அயல் நாடுகளின் மீதும் இந்தியா விசேட அவதானம் செலுத்திவருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஹாட்லி மாணவனின் ஹைபிரிட் சைக்கிள்!





யாழ்ப்பாணம், ஜூலை 7

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வச்சந்திரன் சிறிமன், சாதாரண துவிச்சக்கர வண்டியை மின்கலத்தில் இயங்கும் துவிச்சக்கர வண்டியாக மாற்றியுள்ளார். இந்தத் துவிச்சக்கர வண்டி ஹாட்லிக் கல்லூரியில் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

ஹாட்லிக் கல்லூரியின் இளம் கண்டுபிடிப்பாளர் கழகத்தால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி அறிமுக விழாவில் முதன்மை விருந்தினராக பாடசாலை அதிபர் தம்பையா கலைச்செல்வன் கலந்துகொண்டார். நிகழ்வில் பாடசாலை உப அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம)

## மருத்துவர் சிகிச்சைக்கு வராததால் கர்ப்பிணிப்பெண்கள் அசௌகரியம்



யாழ்ப்பாணம், ஜூலை 7

உரும்பிராய் ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தில் மருத்துவர் வராததால் சிகிச்சைக்காக வருகை தந்த கர்ப்பிணிப்பெண்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உரும்பிராய் ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தில் நேற்று புதன்கிழமை கர்ப்பிணிப்பெண்களைப் பார்வையிடும் தினமாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் அங்கு 40 க்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் வருகைதந்து நீண்ட நேர [illegible] [illegible] யிடுவதற்காக மருத்துவர் வரவில்லை.

தற்போதைய பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றுக்கு மத்தியில் தாம் ஓட்டோவுக்கு அதிக பணம் கொடுத்து மருத்துவமனைக்கு வருகை தந்தும் மருத்துவர் இல்லாமை [illegible] தமக்கு வருத்தம் அளிப்பதாக கர்ப்பிணிப்பெண்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கோப்பாய் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கேட்டபோது, உரும்பிராய் ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தில் நியமிக்கப்பட்டிருந்த மருத்துவர் வெளிநாடு சென்றுள்ளார். அவருக்குப் பதிலாக மற்றுமொரு மருத்துவர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த மருத்துவர் விபத்துக்குள்ளாகி சுகவீன விடுமுறையில் உள்ளார்.

இதனால் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிகளைக் கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

(ஓ-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி.க்கு செல்ல முயன்ற நால்வர் வல்வையில் கைது

**யாழ்ப்பாணம், ஜூலை 7**

**அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாக செல்ல முயன்ற நால்வரை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.**



வவுனியாவைச் சேர்ந்த இருவரும் திருகோணமலையைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொண்டமானாறு இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகில் அதிகாலை வேளை சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நால்வரை அவதானித்த இராணுவத்தினர் அவர்களை விசாரித்த போது அவர்கள் வல்வெட்டித்துறை கடற்பரப்பு ஊடாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அவர்களை இராணுவத்தினர் கைதுசெய்து வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-26)



### மன்னாரிலிருந்து

## படகில் இந்தியா செல்ல முயன்ற 7 பேர் கைது

மன்னார், ஜூலை 7

மன்னாரிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்ல முயன்ற 7 பேரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

மன்னார் தாழ்வுபாடு கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.வவுனியா மற்றும் பதுளையைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் பெண்ணொருவர் உட்பட 7 பேர் அடங்கிய குழுவே இவ்வாறு இந்தியாவுக்குச் செல்ல முயன்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் என மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-56)

## ஆஸி. செல்ல முயன்ற 45 பேர் நேற்றும் கைது

கொழும்பு, ஜூலை 7

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகு மூலம் செல்ல முற்பட்ட 45 பேரை கடற்படையினர் நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.திருகோணமலை குச்சவெளி கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

11 ஆண்கள், 9 பெண்கள் மற்றும் 20 வயதுக்கு குறைவடைந்த 25 பேருமே இவ்வாறு சட்டவிரோதமாக செல்ல முற்பட்டவேளை கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என குச்சவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தற்போதைய கடும் பொருளாதார நெருக்கடியால் சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாக கறுப்புச் சந்தையில் பெற்றோல் வியாபாரம்!

யாழ்ப்பாணம்,, ஜூலை 7

யாழ்ப்பாணம், எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு அருகாக, மூன்றாம் தரப்பினரால், ஒரு லீற்றர் பெற்றோல் தலா மூவாயிரம் ரூபா என்ற அடிப்படையில் பெண்ணொருவருக்கு விற்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு காரில் பெண்ணொருவர் அவசரமாகச் சென்றுள்ளார். அவர் பெற்றோலை மீள் நிரப்புவதற்காகச் சென்றபோது அவருக்கு ரோக்கன் வழங்கப்பட்டுள்ளது. ரோக்கன் இலக்கத்தின்படி அவர் பெற்றோல் நிரப்புவதென்றால் கிட்டத்தட்ட இரவு 10 மணியாகும். இதனால் அந்தப் பெண் அங்கிருந்த இளைஞர்களின் உதவியை நாடியுள்ளார்.

இதையடுத்து அந்தப் பெண்ணுக்கு தலா மூவாயிரம் ரூபா என்ற அடிப்படையில் நான்கரை லீற்றர் பெற்றோல் இளைஞர்களால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-9)

## ஜூலை 11 ஆம் திகதி முதல் லிட்ரோ எரிவாயு விநியோகம்

கொழும்பு, ஜூலை 7

நாளைமறுதினம் சனிக்கிழமை எரிவாயுக் கப்பல் வரவுள்ளதையடுத்து எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் லிட்ரோ எரிவாயு விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

அதற்கமைய கொழும்பில் 140 இடங்களில் தலா 100 கொள்கலன்கள் வீதம்12.5 கிலோ எடையுள்ள 1 லட்சத்து 40 ஆயிரம் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்பின்னர் நாளாந்தம் 25 ஆயிரம் கொள்கலன்கள் விநியோகிக்கப்படவுள்ளன. இந்த நிலையில் ஜூலை இறுதி அல்லது ஓகஸ்ட் முதல் வாரத்தில் எரிவாயு தட்டுப்பாடு தீர்க்கப்படும் என்றும் அடுத்த நான்கு மாதங்களுக்குள் தட்டுப்பாடு இல்லாமல் எரிவாயுவை வழங்க முடியும் என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ஒ-14.இ)




மருந்தும் விருந்தும் மூண்டு நாளைக்கு எண்டு சொல்லுவினம்.அதுக்குப் பிறகு எல்லாம் புளிச்சுப் போடும் . ரணிலின்ர விசயத்திலையும் இப்ப அதுதான் நடக்குது. ரணில் வந்தால் தன்ர பவரைப் பாவிச்சு, வெளிநாடுகளிட்ட டொலர்ப் பிச்சையெடுத்து இஞ்சத்தை நிலைமையைக் கொஞ்சமெண்டாலும் சரிக்கட்டுவார் எண்டுதான் , பஸில் கோவிச்சாலும் பரவாயில்லை எண்டு கோத்தா அவரைக் கொண்டந்தவர். ஆனால் ரணில் தன்ர அரசியலைத்தான் செய்யிறாரே தவிர ஒரு டொலரைக்கூட நாட்டுக்கு கொண்டுவரேலை. எதைச் செய்ய வேணுமோ அதைச் செய்யாமல் ஞானாக்காவுக்கு போட்டிச் சாத்திரி மாதிரி, 'இன்னும் மூண்டு மாசத்தில பஞ்சம் வரும், பெற்றோல் வராது, டொலர் கிடைக்காது' எண்டு புசத்திக் கொண்டிருக்கிறார். இதால நாட்டில இன்னும் குழப்பம் கூடுதே தவிர குறைஞ்சபாடில்லை.

இப்ப ரணிலால டொலரைக் கொண்டுவர ஏலாது எண்டு தெரிஞ்சவுடன, அவருக்குப் பதிலா தம்மிக்கவை மேல கொண்டு வருவம் எண்டு ராஜபக்ச குடும்பம் டிசைட் பண்ணிட்டுது. எப்பிடியாவது ரணிலைப் பிரதமர் பதவியில இருந்து கலைச்சால் தான், அந்த இடத்துக்கு தம்மிக்கவை கொண்டுவரலாம். ஆனால் தாங்களா நேரடியா ரணிலிட்ட இருந்து பதவியைப் பிடுங்கினால், அது இருக்கிற நிலைமையை இன்னும் சிக்கலாக்கிடும். அதால தம்மிக்கவை வைச்சே நேரடியா ரணிலை 'அட்டாக்' பண்ணத் தொடங்கியிருக்கினம். இப்பிடி தம்மிக்கவை கொம்பு சீவிவிட்டதால தான் , 'ஒண்டுமே செய்ய ஏலாத ரணில் நிதியமைச்சை உதறவேணும்' எண்டு தம்மிக்க சேம்சைட் கோலடிச்சு, ரணிலுக்கு எதிரான சண்டையை உத்தியோகபூர்வமா நேற்றுத் தொடங்கியிருக்கிறார். இப்ப தம்மிக்க தொடங்கின இந்தச் சண்டையை இனிவாற நாள்களில சாகல, மஹிந்த, நாமல், மஹிந்தானந்த எண்டு மிச்சமுள்ளவையும் பெருசாக்கி, அந்தக் கரைச்சல் தாங்க முடியாமல் முதலில நிதியமைச்சையும், பிறகு பிரதமர் பதவியையும் விட்டிட்டு, 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' எண்ட மாதிரி ரணில் ஓடவேணும் எண்டதுதான் அவையின்ர பிளான். ஆனால் ரணில் எல்லாரையும் வெண்ட நரியர். அந்தாளுக்கும் இவையின்ர விளையாட்டுத் தெரிஞ்சிருக்கும் தானே. பாப்பம், இந்த விளையாட்டில ரணிலின்ர பதிலடி எப்பிடி இருக்குமெண்டதை.

***********

ஹிருணிகாவைப் பற்றி நேற்றுத்தான் பட்சி சொன்னது. சொல்லி முடிக்கமுதலே நேற்றும் ஒரு போராட்டம். ஹிருணிகா ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால போய் நிண்டுகொண்டு 'கோத்தா வெளியால வாடா' எண்டுற மாதிரி கத்தி, ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறா. ஒரு கட்டத்தில அவாவைப் பொலிஸ் அரெஸ்ட் பண்ணிட்டுது. இப்பிடி அரெஸ்ட் பண்ண வேணுமெண்டுதானே அவா இப்பிடி ஆர்ப்பாட்டமே செய்தவா. ஹிருணிகா தன்ர அரசியல் பவரை உயர்த்திறதுக்காக போட்ட நேற்றையான் நாடகத்தை உண்மையெண்டு நம்பின பேஸ்புக் கூட்டம், சில்லறையெல்லாம் சிதறவிட்டு, 'தலைவி ஹிருணிகாவை விடுதலை செய், தலைவியின்ர கெத்து ஆருக்கு வரும்?' எண்டெல்லாம் வீரவசனங்கள் போட்டு, ஒரேநாளில அவாவை இன்னும் பேமஸாக்கிட்டினம். எதுக்கு ஹிருணிகா ஆசைப்படுறாவோ அதை எங்கட பேஸ்புக் போராளியள் வடிவாச் செய்து குடுக்கத்தான் போயினம் போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நெருக்கடி தபாலில் மருந்துகள்!

சாவகச்சேரி, ஜுலை 7

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, தபாலில் மருந்துகளை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவகச்சேரி மருத்துவமனையிடம் மாதாந்த கிளினிக் நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சாவகச்சேரி மருத்துவமனையில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பொதுமருத்துவம் மற்றும் நீரிழிவு கிளினிக் இடம்பெறுகின்றன. வாரத்தில் குறைந்தது 500க்கும் மேற்பட்ட கிளினிக் நோயாளர்கள் இந்த மருத்துவமனையின் சேவையைப் பெறுகின்றனர். தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால், கொரோனா காலத்தைப் போன்று தமக்குரிய மருந்துகளை தபாலில் அனுப்பிவைக்க மருத்துவமனை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நோயாளர்கள் கோரியுள்ளனர். (ம-9)



# பணிப்புறக்கணிப்பால் ரயில் சேவை ஸ்தம்பிதம்

## ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 7

எரிபொருள் வேண்டும் எனக் கோரி ரயில்வே ஊழியர்கள் நேற்றுமுன்தினம் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரயில் கட்டுப்பாட்டாளர்கள், இயந்திரச் சாரதிகள், அதிபர்கள் உள்ளிட்ட பணிக்குழுவினர் 24 மணிநேர பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பணியாளர்கள் சேவைக்கு சமுகமளிக்காமையால் பல ரயில் சேவைகள் முடங்கியுள்ளன. இதனால் 48 அலுவலக ரயில்களில் 28 ரயில்கள் மட்டுமே நேற்று சேவையில் ஈடுபட்டன.

அத்துடன் கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களின் அதிபர்களும் பணிப்புறக்கணிப்பு செய்துள்ளனர்.

அத்தியாவசிய சேவையாக உள்ள ரயில்வே துறை தொடர்பில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி ரயில் நிலைய ஊழியர்களுக்கு நாளாந்தம் கடமைகளுக்கு சமுகமளிப்பதற்காக எரிபொருள் பெற்றுக்கொடுக்காவிடின் பெரும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அத்தியாவசியமற்ற பயணத்தை இலங்கைக்கு மேற்கொள்ளாதீர்!

## பிரிட்டன் அரசு அறிவுறுத்து

கொழும்பு, ஜுலை 7

இலங்கைக்கு அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு பிரிட்டன் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் தமது பிரஜைகளை கோரியுள்ளது.

இலங்கை தற்போது கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இதனால் மருந்துகள், உணவு, எரிபொருளின்றி இன்னலுறுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்துக்கள் முடங்கியுள்ளன. அவசர தேவைகளும் பாதிப்படைந்துள்ளன. இதனால் மக்கள் பலர் வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடுவதால் பதற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஆகவே இந்த நிலையைக் கருத்திற் கொண்டு அத்தியாவசியமான பயணங்களை மாத்திரம் இலங்கைக்கு மேற்கொள்ளுங்கள் என வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் தமது பிரஜைகளை கோரியுள்ளது. (ச-இ)



சாவகச்சேரி மருத்துவமனையின்

# உண்மை விதையைப் பயன்படுத்தி விவசாயிகள் வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம், ஜுலை 7

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் உண்மை விதையைப் பயன்படுத்தி விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கோப்பாய், தெல்லிப்பழை உடுவில் போன்ற பிரதேசங்கள் இதற்கென தெரிவுசெய்யப்பட்டு மேற்படி பகுதிகளில் சுமார் 250 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இம்முறை போகத்தின்போது விவசாயிகள் வெங்காய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் செய்கையை ஊக்குவிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட செய்கையாளர்களுக்கு மானிய விலையில் உண்மை விதைகள், உரம் மற்றும் சொட்டு நீர்பாசனத்துக்குரிய உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

உண்மை விதைகளை பயன்படுத்தி விவசாயிகள் நாற்றுமேடை அமைத்து அந்த நாற்றுக்களைக் கொண்டு செய்கையில் ஈடுபட்டுள்ளனர். குடாநாட்டில் சின்ன வெங்காயத்தில் விலை அதிகரித்ததை அடுத்து மேற்படி திட்டத்தின் கீழ் இந்தச் செய்கை விவசாயத் திணைக்களத்தால் ஊக்குவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# எரிபொருள் நிலையத் தாக்குதல் வெல்லவாயவில் 13 பேர் கைது


கொழும்பு, ஜுலை 7

வெல்லவாயவில் எரிபொருள் நிரப்பு நிலையம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 13 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எரிபொருள் தீர்ந்துவிட்டது என அறிவிக்கப்பட்டதையடுத்து ஆத்திரமடைந்த அவர்கள் போத்தல்கள் மற்றும் கற்களால் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்து தாக்குதலில் ஈடுபட்ட 13 பேரைக் கைது செய்ததுடன் 20 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# பெற்றோல் தருமாறு பிக்கு ஒருவர் ரகளை

கொழும்பு, ஜுலை 7

பெற்றோல் தருமாறு கோரி இராணுவத்தினருடன் பிக்கு ஒருவர் மோதலில் ஈடுபட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கந்தளாய் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த பிக்கு தினமும் அங்குவருகை தந்து எரிபொருளை நிரப்பிச் செல்கிறார் எனக் கிடைத்த தகவலுக்கமைய இராணுவத்தினர் அவருக்கு எரிபொருள் வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் பிக்கு இராணுவத்தினரை தவறான வார்த்தைகளால் கண்டித்து இராணுவத்தினருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ரகளையில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்த பொலிஸார் பிக்குவை சமாதானப்படுத்தி அனுப்பிவைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# அலுவலர்களும் எரிபொருள் வரிசையில் எவரிடம் எரிபொருள் அட்டை பெறுவது?

## பொதுமக்கள் கேள்வி

சாவகச்சேரி, ஜுலை 6

பொதுமக்களுக்கு எரிபொருள் அட்டையை வழங்க வேண்டிய அலுவலர்கள் அலுவலகங்களில் இல்லாமல் எரிபொருள் வரிசைகளில் நிற்பதால் எவரிடம் நாம் எரிபொருள் அட்டையைப் பெறுவது என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எரிபொருள் அட்டைகளை கிராம அலுவலரை நாடிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எரிபொருள் அட்டையைப் பெறுவதற்காக கிராம அலுவலர் அலுவலகங்களுக்குச் சென்றால் அங்கு கிராம அலுவலர்கள் இருப்பதில்லை. அவர்கள் தமக்கு எரிபொருளைப் பெறுவதற்காக எரிபொருள் வரிசையில் நிற்கின்றனர். இது தொடர்பில் முறையிடுவதற்காக பிரதேச செயலகங்களுக்கு சென்றால் அங்கும் அலுவலர்கள் இருப்பதில்லை.

எனவே பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்ளாத வகையில் அதிகாரிகள் பொருத்தமான பொறிமுறையை வகுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய, ரணில் உடன் பதவி விலகுக

## இலங்கை மருத்துவ நிபுணர்கள் அமைப்பு அழுத்தம்

கொழும்பு, ஜூலை 7

**நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டுப் பிரச்சினையை ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமாக்கி, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் 'பிரித்தாளும் உத்தியைக் கையாள்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஏதுவாக அவர்கள் பதவி விலக வேண்டும் என்று இலங்கை மருத்துவ நிபுணர்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:-

நாம் தற்போது எமது நாட்டின் வரலாற்றிலேயே மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றோம். இதனைவிடவும் மோசமான நெருக்கடிக்கு முகங்கொடுக்கவிருக்கின்றோம். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மருத்துவ நிபுணர்களான நாம் நாட்டுமக்களுக்கு சிறந்த சுகாதார சேவையைப் பெற்றுக்கொடுப்பதில் சவால்களை எதிர்கொண்டிருக்கின்றோம். நாம் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கு வெகுவாக முயற்சி செய்கின்ற சூழ்நிலையில் இதனை சீர்செய்வதற்காகவன்றி, எரிபொருள் தட்டுப்பாட்டுப் பிரச்சினையைத் தமக்கு சாதகமாக்கி, மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கு 'பிரித்தாளும் உத்தியை' ஆட்சியாளர்கள் கையாள்வதை நாம் உணர்ந்திருக்கின்றோம்.

எரிபொருள் உள்ளடங்கலாக எந்தவொரு அத்தியாவசியப்பொருளுக்கேனும் தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில் அதன் விநியோகமானது நாட்டுமக்களுக்கு உச்சளவில் பயனளிக்கக்கூடிய விதத்தில் இடம்பெறவேண்டுமே தவிர, அது சமூகங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தக்கூடியவகையில் அமையக்கூடாது என்று நாம் கருதுகின்றோம். அந்தவகையில் தற்போதைய நெருக்கடி தீர்வு காணப்பட முடியாததாக மாற்றமடைவதற்கு முன்னதாக இந்த நெருக்கடிக்கு நடைமுறைக்கு ஏற்றவகையில் தீர்வு காண்பதை நோக்கி அரசாங்கத்தை வழிநடத்தவேண்டிய பொறுப்பு பொதுமக்கள் அனைவருக்கும் இருக்கின்றது என்பது எமது அபிப்பிராயமாகும்.

ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உடனடியாகப் பதவி விலகி, தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குரிய முறையான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதை இலக்காகக்கொண்டு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கு இடமளிக்கவேண்டும் என்று வலியுத்துகின்றோம். மாறாக அவர்கள் எமது கோரிக்கைக்கு செவிசாய்க்க மறுக்கும் பட்சத்தில், எமது தாய்நாட்டின் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் முழுமையான தொழிற்சங்கப்போராட்டம் மற்றும் பெரும் அமைதிப்போராட்டங்களை நடத்துவது குறித்து சிந்திக்குமாறு தொழில்வல்லுநர்கள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட சகல தரப்பினரிடமும் வேண்டுகோள்விடுக்கின்றோம் - என்றார். (ம)

# குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்!



யாழ்ப்பாணம், ஜூலை 7

இம்முறை சிறுபோகச் செய்கையின்போது குரக்கன் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் பரவலாக சுமார் 300 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விவசாயிகள் சிறுதானிய செய்கையில் ஈடுபட்டுள்ளனர். பயறு, கௌபி, சோளம் போன்ற இதர சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் கொண்டிருக்கின்ற போதிலும், ஒப்பீட்டளவில் குரக்கன் செய்கை அதிகளவான நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-17)

# விவசாயத் திணைக்களத்தால் மரக்கறி விதைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாயத் திணைக்களத்தால் மரக்கறி விதைகள் கையளிக்கப்படவுள்ளன.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கவே விவசாயத் திணைக்களம் இந்த ஊக்குவிப்பு செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளது.

இதன்போது கத்தரி, மிளகாய், கீரை, வெண்டி, பயிற்றை, தக்காளி போன்ற விதைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த மரக்கறி விதை இனங்களை திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-17)

# வளர்ப்புப் பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை

சாவகச்சேரி, ஜூலை 7

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்புப் பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளன.

அதற்கமைய எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் ஆரம்பமாகி, தொடர்ந்து ஏனைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ள விரும்புவோர் தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14.9)

## 10,000 டொலர் பெறுமதியான

# மருத்துவப் பொருள்கள் குவைத்தால் நன்கொடை

கொழும்பு, ஜூலை 7

இலங்கைக்கு 10 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவப் பொருள்களை குவைத் அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

நாட்டில் நிலவும் மருத்துவப் பொருள்களுக்கான தட்டுப்பாடு காரணமாக இலங்கைத் தூதரகத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்கவே இந்த அவசர மருத்துவப் பொருள்கள் கையளிக்கப் பட்டுள்ளன.

இவை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டு குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் யு.எல். மொஹமட் ஜௌஹரால் கையளிக்கப்பட்டன என இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# ஐ.நா. ஒருங்கிணைப்பாளருடன் ஜி.எல்.பீரிஸ் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 7

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் வதி விட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர்ஹம்டியை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதுதொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்,

அமைச்சர் பீரிஸ், நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எரிபொருள், உணவு மற்றும் மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் சர்வதேச நாணய நிதியத்தால் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு அரசாங்கம் புதிய வரவு - செலவுத் திட்டத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதற்கு வதிவிட ஒருங்கிணைப்பாளர், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் நிறுவனங்களின் மனிதாபிமான உதவித் திட்டங்களுடன் மேலதிக உதவிகளும் வழங்கப்படும்.

இவற்றில் யூரியா, மருந்துப் பொருள்கள், விதைகள் மற்றும் பாடசாலைகளுக்கு உணவு வழங்கும் திட்டம் ஆகியவை உள்ளடங்குகின்றன என குறிப்பிட்டார்- என்றுள்ளது. (ச-இ)

# பெற்றோல் விநியோகத்தில் அரச அலுவலர்கள் இடையூறு

யாழ்ப்பாணம், ஜூலை 7

பெற்றோல் விநியோகத்தின் போது அரச அலுவலர்கள் சீரான ஒழுங்குமுறையொன்றை பின்பற்றுவதில்லை என்று எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சில அரச அலுவலகங்களில் அரச அலுவலர்களுக்கு பெற்றோல் நிரப்புவதற்காக அண்மையில் ரோக்கன் வழங்கப்பட்டது. ரோக்கன் நடைமுறைக்கு அமைய அவர்கள் குறித்தொதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்று வரிசையைப் பின்பற்றாமல் குழுமி நின்றுள்ளனர். இதனால் எரிபொருள் நிரப்பு நிலையத்தினரின் விநியோகத்தை இலகுவாக்கும் வகையிலும் வீண் சர்ச்சைகள் வராமல் தடுக்கும் வகையிலும் வரிசையில் நிற்குமாறு அவர்களை அறிவுறுத்தியுள்ளர். எனினும் அரச அலுவலர்கள் அதைச் செவிமெடுக்கவில்லை. இதனால் ஏனையோருக்கு வழங்கிய பின்னரே அரச அலுவலர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பரில் இளைஞர்கள் கடத்தல் பொலிஸார் தீவிர விசாரணை!

**முல்லைத்தீவு, ஜூலை 7**

**முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் டிப்பர் வாகனத்தில் இளைஞர்கள் மூவர் கடத்தப்பட்டுள்ளனர். மேற்படி மூன்று இளைஞர்களும் தற்போது மீட்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.**

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
கடந்தவாரம் இளைஞர் குழுக்களுக்கு இடையே கல்லாற்றுப் பகுதியில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதன் போது இளைஞர் ஒருவரைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்படும் மூன்று இளைஞர்களே இவ்வாறு டிப்பரில் கடத்தப்பட்டுள்ளனர்.
விசுவமடுப் பகுதியில் கடத்தப்பட்டோருடன் டிப்பர் சென்று கொண்டிருந்த போது பாலமொன்றுடன் மோதியதில் டிப்பரின் ரயர் வெடித்துள்ளது. இதையடுத்து இளைஞர்களைக் கடத்திச் சென்றவர்கள் தப்பியோடிய நிலையில், கடத்தப்பட்ட மூவரும் பொலிஸாரால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)




## புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் 14 மகளிர் குழுக்களுக்கு நிதியுதவி

முல்லைத்தீவு, ஜூலை 7
புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 14 மகளிர் சுயசேமிப்புக் குழுக்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் நேற்று வழங்கப்பட்டது.
நேசக்கரங்கள் அமைப்பின் கிராம மகளிர் சுயசேமிப்புக்குழுக்களுக்கான ஒருகோடி நிதி வழங்கல் திட்டத்தில் தாய்த்தமிழ்பேரவையின் ஆதரவோடு நேசக்கரங்கள் இங்கிலாந்துக் கிளை, கனடா கிளை இணைந்து 12 குழுக்களுக்கு 3 லட்சம் ரூபாவும் கதிரவன் அரிய ரெட்ணத்தின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு கனடாவில் வசித்துவரும் அரியரெட்ணம் குடும்பத்தினால் இரண்டு குழுக்களுக்கான 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.
தாய்த்தமிழ்ப் பேரவையின் ஸ்தாபகர் ச.றூபன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (ஒ-14-19)

## மருந்துக்கான விலைமனு கோரல் முறைகேடு; குற்றவாளிகளுக்குத் தண்டனை

கொழும்பு, ஜூலை 7
முறைகேடான மருந்து விலைமனுகோரல் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடக குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்தார்.
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரகாரம் முறைகேடான மருந்து விலைமனுகோரல் குற்றவாளிகளாக பதியப்பட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் உரிய அதிகாரிகள் செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



## வவுனியா இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் உயிரிழப்பு

வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் எஸ்.இன்பராயன் சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார். கடந்த சில நாள்களாக உடல் சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார். (ஒ-14-110)

## நாடாளுமன்றின் 'வைஃபை' கட்டணம் செலுத்தவில்லையாம்

கொழும்பு, ஜூலை 7
நாடாளுமன்றில் ஊடகவியலாளர் அறையின் 'வைஃபை' சேவைக்கான கட்டணம் செலுத்தப் படாததால் நாடாளுமன்றத்தில் இணைய வசதி பாதிப்படைத்துள்ளது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஆராய்ந்து உடனடித் தீர்வுகளை வழங்காவிடின் நாடாளுமன்றச் செயற்பாடுகள் பாதிப்படையும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
இதன்போது அவையில் இருந்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். (ச-இ)




## புதையல் தோண்ட முற்பட்ட 9 பேர் சந்தேகத்தில் கைது!

வவுனியா, ஜூலை 7
வவுனியா இலுப்பைக்குளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 9 பேர் சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
இலுப்பைக்குளம் பகுதியில் சந்தேகத்துக்கிடமான நபர்கள் நடமாடுவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவால் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் 9 சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.
அத்துடன் அவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஸ்கானர் இயந்திரம் ஒன்றும் மீட்கப்பட்டது.
கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் வவுனியாவை சேர்ந்தவர்கள் என்றும் மற்றைய 7 பேர் தென்பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-110)

## கரடித் தாக்குதலுக்கு இலக்காகிப் பலர் காயம்

மன்னார் - வட்டுப்பித்தான் மடு, நானாட்டான், வங்காலை போன்ற பகுதிகளில் அண்மைய நாள்களாக பலர் கரடித் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளனர்.
இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குத் தெரியப்படுத்தியும் தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகக் கரடியை வந்து பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்தனர்.
கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் கடற்கரைப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவர் மீது கரடி தாக்கிய நிலையில், மீனவர் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மன்னார் பொது மருத்துவமனையில் விலங்குக்கடி நோய்த் தடுப்பு மருந்துக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், தொடர்ச்சியாக கரடித் தாக்குதல் இடம்பெறுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.
எனவே வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு எரிபொருளை வழங்குவதற்கான செயற்பாட்டை மேற்கொண்டு கரடியைப் பிடிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-56)

## 3 லட்சம் பெறுமதியான வலிநிவாரணியை போதைக்கு பயன்படுத்திய ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 7
மருத்துவர்களால் வலிநிவாரணி மருந்தாக பரிந்துரைக்கப்பட்ட 3 லட்சம் பெறுமதியான மருந்துவகைகளை போதைப்பொருளுக்குப் பயன்படுத்திய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கம்பஹா - மல்வத்துஹிரிபிட்டியவில் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் குறித்த மருந்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
இதுதொடர்பில் புட்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து, அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்த 3 லட்சம் பெறுமதியான வலிநிவாரணி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறனற்ற எதிர்க்கட்சியும் நாட்டுக்குச் சாபக்கேடே!

இலங்கையின் வரலாற்றில் மிகமோசமான அரசாங்கத்தை மட்டுமல்லாது மோசமான எதிர்க்கட்சியையும் இப்போது மக்கள் ஒரேசமயத்தில் பார்க்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். 'குழம்பிக் கிடக்கும் ஆட்சியை எப்படிக் கைப்பற்றுவது என்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. என்னிடம் கற்றதைச் செயற்படுத்துவதற்கு எதிர்க்கட்சியினரால் இயலவில்லை' என்று நாடாளுமன்றத்தில் வைத்து வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில். 'மோசமான எதிர்க்கட்சி' என்ற சொல்லாடல், இந்த இடத்தில் 'வினைத்திறனற்ற எதிர்க்கட்சி' என்றே அர்த்தப்படுகின்றது. அந்த வகையில் ரணிலின் கூற்றுக்கள் அத்தனையும் நூற்றுக்கு நூறு சரியானவையே. அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

ராஜபக்சக்களின் நிர்வாகச் சீர்குலைவான ஆட்சியாலும், சீன சார்புக் கொள்கைகள் மற்றும் கடன்களாலும் நாடு இன்று மரணப்படுக்கையில் வீழ்ந்துகிடக்கின்றது. இந்த பொருண்மிய நலிவு நிலை திடீரென ஓரிரவில் நடந்த விடயமல்ல. கறையான் கூட்டம் ஒரு மரத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்து அழிப்பதுபோன்றுதான் ராஜபக்சக்கள் எனும் கறையான்களும் இலங்கை என்னும் இந்த 'பச்சை' மரத்தை கொஞ்சம்கொஞ்சமாக ஆக்கிரமித்து அழித்தன. இவ்வாறாக இலங்கை தனது இயல்பையும், இருப்பையும் ராஜபக்சக்களாலும், பெரமுனவாலும் இழந்துகொண்டிருக்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது எதிர்க்கட்சிகளின் கூட்டணியான ஐக்கிய மக்கள் கூட்டணியோ எந்தக் காத்திரமான நடவடிக்கைகளையும் நகர்வுகளையும் முன்னெடுக்கவில்லை என்பது நிதர்சனம்.

வரிச் சலுகைக்கு அமைச்சரவை அனுமதித்தபோது, இதன் விளைவு பாரதூரமாக இருக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள ஹர்ஷ டி சில்வா போன்ற நிபுணர்கள் எச்சரிக்கவே செய்தனர். இரசாயன உரத்தை இறக்குமதி செய்யத் தடை விதித்தபோது, இதனால் நாட்டின் உணவுற்பத்தி பாதிக்கப்படும் என்று சம்பிக்க ரணவக்க (அக்காலத்தில் சம்பிக்க சஜித் தரப்புடன் இணைந்திருந்தார்), சஜித் போன்றோர் எதிர்த்தனர். அப்படி ஓர் எதிர்ப்பை எதிர்க்கட்சிகள் வெளிப்படுத்தி இருந்தாலும், அரசாங்கத்தின் முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்தும் வகையிலோ அல்லது அரசாங்கத்தின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தடைபோடும் வகையிலோ எந்தவொரு செயற்பாட்டு முடக்கத்தையும் அவை முன்னெடுக்கவில்லை.


நாட்டில் படுமோசமாக பொருண்மிய நலிவு நிலையின் தொடர்ச்சியாக, சராசரி வருமானமுள்ள குடும்பங்கள் இன்று வாழவேமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் நெருக்கடிகள் வானுயர்ந்து நிற்கின்றன. ஆலைவாய்க் கரும்புபோல் ஒவ்வொரு குடிமக்களின் வாழ்வும் நெரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்போதாவது எதிர்க்கட்சிகள் ஏதாவது காத்திரமான நடவடிக்கையை முன்னெடுத்தனவா? என்றால், அதற்குரிய பதில் எங்களின் ஒட்டுமொத்த மனக்குமுறலின் வெளிப்பாடாகத்தான் இருக்கும்.

இத்தனை பாரதூரமான பாதிப்புக்களுக்கு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக வினையாற்றாத ஐக்கிய மக்கள் சக்தி, அவ்வப்போது கண்டன ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்புப் பேரணிகளையும் மட்டும் நடத்துவதோடு தன் கடமையை நிறைவுசெய்கின்றது. உண்மையில், இவை அரசாங்கத்துக்கு எதிரான கண்டன நகர்வுகளாக அல்லாமல் மக்கள் மத்தியில் தமது செல்வாக்கு எந்த மட்டத்தில் உள்ளது என்பதை நாடிபிடித்துப் பார்க்கும் முயற்சிகளோ என்ற சந்தேகமும் மக்களிடம் எழவே செய்கின்றது.

இப்படியொரு பின்னணியில் இலங்கை வரலாற்றில் மோசமானதும் வினைத்திறன் அற்றதுமான எதிர்க்கட்சி இப்போது நமக்கு வாய்க்கப் பெற்றிருக்கிறது என்பதில் மட்டும் எந்தச் சந்தேகமுமில்லை. நாட்டின் இன்றைய அவல நிலைக்கு எதிர்க்கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டியன. ஒன்றுமட்டும் உண்மை, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைத்து எதிர்க்கட்சியாக பெரமுன இருந்திருந்து இத்தனை நலிவுகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டிருந்தால், பெரமுன ஆட்சியைத் தன் வசப்படுத்த மிகக்குறுகிய காலமே எடுத்திருக்கும். அப்படியான அரசியலில் ராஜபக்சக்கள் கில்லாடிகள். உண்மையில் ரணில் சொல்வது போன்று, சஜித் தரப்புக்கு ஆட்சியை எப்படிக் கைப்பற்றுவது என்று மட்டுமல்ல, எப்படி சரியான அரசியல் செய்வது என்றும் தெரியவில்லைத்தான்.

நாளொரு நல்வார்த்தை

"யாருக்காகவும் உன்னை மாற்றிக் கொள்ளாதே. ஒருவேளை மாற நினைத்தால் ஒவ்வொரு மனிதர்களுக்கும் நீ மாறவேண்டி வரும்" - கண்ணதாசன்



# இராணுவத்துக்கு எதிரான மனு விசாரணைக்கு

**கொழும்பு, ஜூலை 7**

**இராணுவத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.**

கடந்த ஜூன் 30 ஆம் திகதி காலி கோட்டைக்கு எதிரே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இடையூறு விளைவித்த இராணுவ குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு 5 பேர் கொண்ட அமர்வில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே எதிர்வரும் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத்தீர்மானிக்கப்பட்டது.

(ஒ-14,இ)

# இலங்கையின் சட்டக்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு 15 மில். டொலர்

## அமெரிக்கா வழங்கியது

கொழும்பு, ஜூலை 7

இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு நீதியமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்யும் நோக்கில், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் 15 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. இந்த உதவி நீதியை நாடுவதிலுள்ள சமத்துவத்தன்மை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு மிகவும் அவசியம் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

இலங்கையின் சட்டக்கட்டமைப்பை சர்வதேச சட்டக்கட்டமைப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பான கடப்பாடுகளுக்கு அமைவானதாக மேம்படுத்துவதற்கு அவசியமான உதவிகளை நீதியமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டமைப்புக்களுடன் இணைந்து வழங்குவதன் மூலம் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவொன்றை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதில் "நீதியை நாடுவதற்கான சமத்துவத்தன்மையை உறுதி செய்வதென்பது பொருளாதார உறுதித்தன்மைக்கு இன்றியமையாததாகும். அந்த வகையில் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கான நீதியமைச் சின் முயற்சிக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வகையில் பயிற்சிகளை வழங்குவதற்கும், தொழில்நுட்பங்களை நவீனமயப்படுத்துவதற்கும், இலங்கையின் சட்டக்கட்டமைப்பில் பெண்களின் வகிபாகத்தை மேம்படுத்துவதற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் 15 மில்லியன் டொலரை வழங்குகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

08.07.2022 வெள்ளிக்கிழமை ஆனி 24

சுபநேரம் : 05.58 - 07.28

ராகுகாலம்: 10.28 - 11.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் ஆளுமையில் ஆசிரியர்களின் வகிபங்கு

த.பாலகிட்ணபிள்ளை



மாணவர்களின் முன்னேற்றத்துக்கும் அறிவு வளர்ச்சிக்கும் அவர்களை நல்லொழுக்கத்துடன் நல்வழிநடத்துவதிலும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் ஆசிரியர்களின் பணியும் மிக அவசியமாகிறது. ஆசிரியர்களிடத்தில் காணப்படும் தனித்தன்மை, அறிவாற்றல், எடுத்துக்கொண்ட விடயத்தை இலகு சொல்லில் வெளிப்படுத்தல் ஆளுமையான மாணவர்களின் உருவாக்கத்துக்கும் காரணமாக அமைகின்றன.

நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் திறமையாகவும் தன் கடமையைச் சரிவரச் செய்யும் ஆசிரியப் பெருந்தகைகள், பிறருக்கு உபதேசம் பண்ணுகிறவர்களின் ஒரு பெரும்படையை விடத் தன்னைத்தானே பரிபூரணமாகத் தூய்மைப்படுத்திக் கொண்டு அதிக சாதனைகளை சாதிக்கும் ஒருவனுக்கு ஒப்பானவர்கள். பாடங்களைப் போதிப்பதற்கான அறிவு, வெறும் புத்தியைச் சார்ந்ததாயினும், அந்தக் கலையில் அபாரமான அறிவு, ஆற்றல் இருந்தும் அவ்வப்போது புதிய விடயங்களை புதிய பரிமாணத்தில் ஆய்வுசெய்து தனது அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளுதல் ஆசிரியர்களுக்கு மிக அவசியம். ஆசிரியர் தனது அறிவுசார் மன அலைகளை மாணவனின் மனத்துக்கு அனுப்புகிறார். வெறுமனே மூளைச் சக்திகளைத் தூண்டிவிடுவதல்ல அவர் வேலை. தம்மிடமிருக்கும் சக்தியைப் பாய்ச்சி மாற்றிக் கொடுப்பது தான் ஆசிரியர் வேலை. உண்மையான புலனுக்குத் தெரிகிற ஒரு சக்தி ஆசிரியரிடமிருந்து வெளிப்பட்டு மாணவனை அடைந்து அங்கே அவனது மனதில் வளர்ச்சியடைய ஆரம்பிக்கிறது. எனவே ஆசிரியர் உண்மையானவராக இருக்க வேண்டுமென்பது அவசியமான நிபந்தனையாகும்.

சில சமயங்களில் மிக அழகான சொற்பொழிவுகளை நாம் கேட்கிறோம். மிக அற்புதமான தர்க்க வாதங்களுடன் நாம் இதுவரை அறிந்திராத பல புதிய விடயங்களை புதிய கோணத்தில் ஆய்வுசெய்து கருத்துரைப்பதைச் செவிமடுத்திருக்கிறோம். பின்னர் வீட்டுக்குப் போனவுடன் எல்லாம் மறந்து போகிறது. வேறு சில சமயங்களில் ஒரு சில வார்த்தைகளையே மிகச் சாதாரணமான சொல்லமைப்புடன் கேட்கிறோம். அவை வாழ்வினுள் புகுந்துவிடுகின்றன. எமது உடலில் பிரிக்கமுடியாத அங்கமாகி விடுகின்றன. நிரந்தரமான விளைவுகளை உண்டாக்குகின்றன. தான் கூறும் சொற்களில் தனது ஆத்ம சக்தியைப் புகுத்த முடிகிற மனிதனின் வார்த்தைகளுக்குப் பயன் ஏற்படுகிறது. ஆனால் அந்த மனிதனுக்கு அபாரமான தனித்துவச் சக்தி இருக்க வேண்டும். எல்லாப் போதனைகளிலும் கொடுக்கல் வாங்கல் பொதிந்து உள்ளது. ஆசிரியர் கொடுக்கிறார். மாணவன் வாங்குகிறான். ஆனால் ஒருவரிடம் கொடுப்பதற்கு ஏதாவது இருக்க வேண்டும். வாங்கிக் கொள்கிறவனும் பெறுவதற்கு ஆயத்தமாகத் திறந்த மனதுடன் இருக்க வேண்டும். கற்பித்தல் என்பது மாணவருக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவதேயாகும். இவ்விடயத்தில் ஆசிரியர் செய்யவேண்டிய ஒரே கடமை மாணவனின் பாதையிலுள்ள எல்லாத் தடைக் குறுக்கீடுகளையும் அகற்றுவதேயாகும்.

## தாழ்வு மனப்பான்மைக்கு இடம்கொடேல்

எதிர்மறை எண்ணங்கள் மாணவர்களைப் பலவீனப்படுத்துகின்றன. சில பெற்றோர் எப்பொழுது பார்த்தாலும் தமது பிள்ளைகளைப் படிக்கும்படியும் எழுதும்படியும் வற்புறுத்துவார்கள். 'உனக்குப் படிப்பே வராது. நீ முட்டாள்' என்று பலவாறாகத் திட்டுவார்கள். அதேபோல் எத்தனையோ பிள்ளைகள் முட்டாள்களாகவே மாறிவிடுவதை நீங்கள் கண்டதில்லையா? பிள்ளைகளான மாணவர்களிடம் அன்பாகப் பேசி அவர்களை உற்சாகப் படுத்தினால் நாளடைவில் அவர்கள் முன்னேறுவது திண்ணம். சிறுவர்களுக்கு எது நல்லதாகப் பொருந்துகிறதோ அதுவே உயர்ந்த சிந்தனைத்துறையில் சிறுவர்களாக இருப்பவர்களுக்கும் பொருத்தமாகும். அவர்களுக்கு ஆக்கக் கருத்துக்களை அளித்து வந்தால் ஆளுமையுள்ளவர்களாக வளர்ந்து தம்மையே நம்பிவாழக் கற்றுக்கொள்வார்கள். மொழி, இலக்கியம், கவிதை, கலை ஆகிய் எல்லாவற்றிலுமே ஈடுபட்டுள்ள மாணவர்களின் சிந்தனையிலும் செயலிலும் உள்ள தவறை நாம் சுட்டிக்காட்டக் கூடாது. அந்தந்தக் காரியங்களை எவ்வழியால் செய்தால் இப்பொழுதுள்ளதைவிட நல்ல முறையில் செய்துமுடிக்க முடியும் என்பதையே சுட்டிக்காட்ட வேண்டும். குறைகளைச் சுட்டிக்காட்டுவது ஒருவருடைய உணர்ச்சிகளைப் புண்படுத்துகிறது. நாங்கள் உபயோகமற்ற உதவாக்கரையென்று கருதியவர்கள்கூட பின்னொரு காலத்தில் அவர்களது வாழ்வின் பாதையே திரும்பி மிகப் பொறுப்புடனும் மக்களால் மதிக்கப்பட்டும் ஒளிமிகு வாழ்க்கை அமையப் பெற்றமையை எமது கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

> **மாணவர்களும் தம் உருவாக்கத்துக்குத் தம்மைத்தாமே ஆத்மார்த்தமாக அர்ப்பணிக்க வேண்டும். சிந்தனை எங்கே இல்லையோ அங்கே தசைகளின் மூலமாக சக்தியை வெளிப்படுத்தும் நிகழ்வும் இடம்பெறாது. ஆகவே உங்கள் மூளையை உயர்ந்த சிந்தனைகளால் மகோன்னதமான இலட்சியங்களால் நிரப்பி வையுங்கள்.**



## கல்வி முறைமை

கல்வி என்ற மந்திரச் சொல்லால் தீர்க்க முடியாத பிரச்சினைகள் எதுவுமே இல்லையெனலாம். உண்மையான கல்வியின் வடிவத்தை இன்னும் எமது மக்கள் கற்பனை செய்து அமைக்கவில்லை. கல்வி என்பது ஆற்றலை வளர்ப்பதாகும் மாறாக வெறும் சொற்களைக் குவித்து வைத்துக் கொள்வதல்ல. கல்வியின் பயன் மனிதர்கள் சரியான விதத்திலும் திறமையாகவும் சிந்தித்து எல்லா வகையிலும் ஏற்ற முடிவுகளை எட்டவைத்தலேயாகும். இன்றைய கல்வி முறையில் பல நல்ல சிறப்பம்சங்கள் உள்ளன. அதேநேரத்தில் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன. சில வேளைகளில் இக்குறைபாடுகள் சிறப்பு அம்சங்களை மறைக்கும்படி அமைந்து விடுகின்றன. ஒருவனுடைய மூளையில் விடயங்களைத் திணிப்பது மட்டும் கல்வியாகாது. அப்படித் திணிக்கப்படும் விடயங்கள் ஜீரணமாகாமல் வாழ்நாள் முழுவதும் குழப்பமுண்டாக்கிக் கொண்டிருக்கும். வாழ்க்கையை உருவாக்குகின்ற, ஆளுமையை உருவாக்கின்ற, ஒழுக்க மூட்டுகின்ற கல்விமுறைமை வேண்டும்.

## இலட்சியங்கள் வேண்டும்

மாணவர்களும் தம் உருவாக்கத்துக்குத் தம்மைத் தாமே ஆத்மார்த்தமாக அர்ப்பணிக்க வேண்டும். சிந்தனை எங்கே இல்லையோ அங்கே தசைகளின் மூலமாக சக்தியை வெளிப்படுத்தும் நிகழ்வும் இடம் பெறாது. ஆகவே உங்கள் மூளையை உயர்ந்த சிந்தனைகளால், மகோன்னதமான இலட்சியங்களால் நிரப்பி வையுங்கள். இரவும் பகலும் அதைப்பற்றியே சிந்தியுங்கள். வானத்தை எல்லோரும் பார்க்க முடியும். நிலத்தில் ஊர்ந்து திரியும் புழுவும் கூட வானத்தைப் பார்க்கிறது. வானத்தில் இருந்து அது தொலை தூரத்தில் உள்ளது. நமது இலட்சியங்களும் அப்படித்தான். அது நெடுந்தொலைவிலுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதை நாம் அடைந்தேதான் தீரவேண்டும். ஈடுஇணையற்ற மகோன்னதமான ஓர் இலட்சியத்தை நாம் கண்டிப்பாக வைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாகப் பெரும்பான்மையான மக்கள் தமது இருண்ட வாழ்க்கையில் எந்த ஓர் இலட்சியமுமில்லாமல் தட்டுத் தடுமாறி அலைகிறார்கள். இலட்சியத்தை ஏற்படுத்திக் கொண்ட மனிதன் ஆயிரம் தவறு இழைக்கிறானென்றால் இலட்சியமற்றவன் ஐம்பதினாயிரம் தவறுகள் செய்கிறான் என்பதில் ஐயமில்லை. ஆகவே இலட்சியம் ஒன்றை வைத்துக் கொள்வது மிக நல்லது. முடிந்த அளவு உங்கள் இலட்சியம் நிறைவேறுவதற்கான வழிவகைகள் பற்றி சிந்தித்துக் கொண்டேயிருங்கள். அது எமது உள்ளங்களில் நுழைந்து, மூளைகளில் நுழைந்து, எமது இரத்தக் குழாய்களில் கூட நுழைந்து ஒவ்வொரு துளி இரத்தத்திலும் துடிதுடிக்கிற வரையில், எமது உடலிலுள்ள ஒவ்வொரு மயிர்க்காலிலும் வியாபித்து நிற்கிற வரையில் இலட்சியம் பற்றியே சிந்திக்க வேண்டும். உள்ளம் நிரம்பிப் பெருகும் பொழுது வாய் பேசுகிறது. எமது உடலுறுப்புகள் தானாகவே ஒருங்கிணைந்து இலட்சிய நிறைவேற்று நோக்கில் பயணிக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சிகள் வெற்றியாகும் நாள். தடைகளைக் கடந்து நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் உண்டான தடைகளை சரி செய்வீர்கள். முயற்சியில் அனுகூலம் காண்பீர்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமைப்படுவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தினரின் பாராட்டைப் பெறுவீர்கள். வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்:** பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு காண்பீர்கள். செல்வாக்கு உயரும் நாள். விருப்பப்படி செயற்பட்டு உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். தொழிலில் லாபம் குறையும்.

**கடகம்:** குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தொழிலில் புதிய பாதை புலப்படும். விவேகத்துடன் செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த செய்தி வரும். பிரச்சினை தீரும்.

**சிம்மம்:** கவனக்குறைவால் இழப்புகளைச் சந்திப்பீர்கள். நிதானமாகச் செயற்படுங்கள். உறவினர் தேடி வருவர். செல்வாக்கு உயரும். தள்ளிப்போன செயல்கள் முடியும்.

**கன்னி:** பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். குரு அருளால் உங்கள் எண்ணம் நிறைவேறும். முயற்சி நிறைவேறும்.

**துலாம்:** திடீர்ச் செலவுகள் ஏற்பட்டு பணத்தேவை அதிகரிக்கும். போராடி சமாளிப்பீர்கள். பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள். உங்கள் கவனக் குறைவால் செலவுகளை சந்திப்பீர்கள். கருத்து வேறுபாடு உண்டாகும்.


**விருச்சிகம்:** இழுபறியாக இருந்த செயல்கள் நிறைவேறும். வராமல் இருந்த பணம் வரும். பிரபலங்களின் துணையுடன் வழக்குகளில் வெற்றி காண்பீர்கள். சிக்கல் தீரும். விரும்பியதை இன்று அடைவீர்கள்.

**தனுசு:** தொழிலில் உண்டான நஷ்ட நிலைக்குத் தீர்வு காண்பீர்கள். உங்கள் அணுகுமுறை ஆதாயம் தரும். வேலை தேடி வந்தவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு இடமாற்றம் கிடைக்கும்.

**மகரம்:** தடைகளை விலக்கி முயற்சியில் வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டபடி செயற்படுவீர்கள். நிறைவேறாமல் இருந்த ஒரு முயற்சி நிறைவேறும். சங்கடங்கள் விலகும்.

**கும்பம்:** முயற்சிகளில் நீங்கள் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். மனதுக்குச் சங்கடம் உண்டாகும் வகையில் சில செயல்கள் நடந்தேறும். பழைய பிரச்சினை ஒன்று மீண்டும் தலையெடுக்கும்.

**மீனம்:** தடைபட்டிருந்த முயற்சி இன்று நடந்தேறும். எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள். நீண்டநாளுக்குப் பிறகு உங்கள் மனம் மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினை தீரும்.




# நிலவே நீ தான் யாருக்கு சொந்தம்?

*அமெரிக்கா– சீனா இடையே வலுக்கும் மோதல்*

பீஜிங், ஜூலை 7

**நிலவு யாருக்கு சொந்தம் என்பது குறித்து தற்போது அமெரிக்கா - சீனா இடையே மோதல் வலுத்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



விண்வெளி குறித்த ஆய்வுப் பணிகளில் உலகெங்கும் உள்ள நாடுகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. அதிலும் பூமியின் துணைக்கோளான சந்திரன் குறித்த ஆய்வில் பல நாடுகள் ஆர்வம் காட்டியுள்ளன.

கடந்த நூற்றாண்டில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேதான் தான் கடும் போட்டி நிலவியது. தற்போது இந்தப் பட்டியலில் சீனாவும் இணைந்துள்ளது. சந்திரனை ஆராய்வதில் கவனம் செலுத்தி வரும் சீனா கடந்த 10 ஆண்டுகளில் விண்வெளி ஆய்வை வேகமாக மேற்கொண்டு வருகிறது. சந்திரனுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் சக்திவாய்ந்த ரொக்கெட்டுகளை உருவாக்கும் பணிகளில் சீனா மும்முரம் காட்டியுள்ள நிலையில் விரைவில் சந்திரனுக்கு மனிதர்களை அந்த நாடு அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது குறித்து அமெரிக்காவிலுள்ள நாசா நிறுவன நிர்வாகி தெரிவிக்கையில்,

நிலா எங்களுடையது, நீங்கள் வெளியே இருங்கள். சீனாவின் விண்வெளித் திட்டம் இராணுவத் திட்டம் ஆகும். மற்றவர்களிடமிருந்து யோசனைகளையும் தொழில்நுட்பத்தையும் சீனா திருடிவிட்டது. அவர்கள் நிலவையே கடத்திக்கொள்ளவும் வாய்ப்புள்ளது - என்றார்.

இது குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

நாசா தலைவர் உண்மைகளைப் புறக்கணித்து சீனாவைப் குறித்து பொறுப்பற்ற முறையில் பேசுவது இது முதல்முறை இல்லை. சீனாவின் இயல்பான மற்றும் நியாயமான விண்வெளி முயற்சிகளுக்கு எதிராக அமெரிக்கத் தரப்பு தொடர்ந்து ஓர் அவதூற்று பரப்புரை செய்து வருகிறது. இதற்குச் சீனா கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறது - என்றார். (ச-இ)

# காரைக்காலில் கொலராவால் இருவர் சாவு

புதுடில்லி, ஜூலை 7

இந்தியாவின் காரைக்கால் மாவட்டத்தில் கொலரா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதில் 39 நோயாளிகளுக்கு கொலராத் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்த நிலையில், காரைக்கால் மருத்துவமனையில் கொலரா நோயால் பாதிக்கப்பட்ட இருவர் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. (ச-இ)



# ஈபிள் கோபுரத்துக்கு வர்ணம் பூச ஏற்பாடு

பாரிஸ், ஜூலை 7

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு ஈபிள் கோபுரத்துக்கு வர்ணம் பூசும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குஸ்டாவ் ஈபிள் என்பவரால் கட்டப்பட்ட முற்றிலும் இரும்பினாலான இந்த கோபுரம் ஆயிரத்து 63 அடி உயரம் கொண்டதாகும்.

உலகில் அதிகமானோரால் பார்வையிடப்பட்ட சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இந்த ஈபிள் கோபுரம் விளங்குகிறது.

இந்த நிலையில் ஈபிள் கோபுரம் துருப்பிடித்து மோசமான நிலையில் உள்ளது எனவும் பழுதுபார்ப்புக்குப் பதிலாக ஈபிள் கோபுரத்துக்கு சுமார் 60 மில்லியன் யூரோ செலவில் வெறுமனே வர்ணம் பூசும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஈபிள் கோபுரத்தை பராமரித்து வரும் தனியார் நிறுவனம் இது தொடர்பில் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. (ச-இ)

பருவநிலை மாற்ற எதிரொலி

# இத்தாலியில் கடும் வறட்சி

ரோம், ஜூலை 7

இத்தாலியில் 70 ஆண்டுகள் இல்லாத வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஐந்து பிராந்தியங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

மழையின்மையால் ஏற்பட்டுள்ள இந்த மோசமான வறட்சியால் அங்கு 30 விழுக்காட்டுக்கும் கூடுதலான விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு விவசாயச் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இந்த வறட்சிநிலையை எதிர்கொள்ள லோம்பார்டி, எமிலியாரோமக்னா, பிரியூலி வெனிசியா கியுலியா, பீட்மாண்ட் மற்றும் வெனெட்டோ ஆகிய 5 வடக்கு பிராந்தியங்களிலேயே இத்தாலி அரசு அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது. (ச-இ)

# ஆஸியில் கனமழை

அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் பெய்து வரும் கனமழை காரணமாக புறநகர்ப் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் ஆயிரக் கணக்கான மக்கள் இயல்புநிலையை இழந்து தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் வீதிப்போக்குவரத்தும் அங்கு துண்டிக்கப்பட்டுள்ளது.

வரலாறு காணாத இந்த இயற்கைப் பேரிடர் பருவநிலை மாற்றத்தின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது என அவதானிகளால் ஊகிக்கப்படுகின்றது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறைக்கைதிகள் உழைப்பை அறுவடையாக்க நடவடிக்கை

## அமைச்சரவையில் முன்மொழிவு அறிக்கை

கொழும்பு, ஜுலை 7


**சிறைக்கைதிகளை சிறைக்கூடத்தில் தடுத்து வைத்திருக்கும் நடை முறைக்குப் பதிலாக அவர்களை நாட்டின் மனிதவளமாக மாற்றி அவர்களின் உழைப்பை விளைச்சலாக மாற்றும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகம் ஆகியவை திட்டமிட்டுள்ளன.**

'செழிப்பான- சிறைக்கூடத்திலிருந்து பயிர்நிலத்துக்கு' எனும் தொனிப்பொருளில் இந்த விவசாய பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த வேலைத்திட்டம் தொடர்பான முன்மொழிவு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. அந்த முன்மொழிவு அறிக்கையில் உள்ளதாவது:

விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனையின் கீழ் திறந்த சிறைச்சாலை முகாம்கள் மற்றும் வேலை முகாம்களில் உயர்ந்தபட்ச விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விவசாயப் பயிரிடல் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன் மூலம் கிடைக்கின்ற விளைச்சல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய பயன்படுத்தப்படவுள்ளது. மேலும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டவர்களின் மறுவாழ்வு பணியகத்தின் மூலம் 3 புனர்வாழ்வு நிலையங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

குறித்த பணிகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக கிழக்கு மாகாணத்தில் கந்தகாடு மற்றும் நவசேனபுர பிரதேசங்களில் மகாவலி அதிகாரசபை மற்றும் தேசிய கால்நடைகள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயிரிடப்படாத ஆயிரம் ஏக்கர் காணிகளைப் பெற்று அவற்றில் 500 ஏக்கர் காணியில் சோளப் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய காணியில் அந்தந்தப் பிரதேசத்துக்கு உகந்த தானியங்கள், மரக்கறி மற்றும் பழவகைகளை மறுவாழ்வு பெறுவோரின் உழைப்பைப் பயன்படுத்தி பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ச-இ)



# கைத்தொழிலுக்கான வெடிமருந்து இறக்குமதிக்கு மாற்றுத் திட்டம்!

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜுலை 7

கைத்தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்துப் பற்றாக்குறையைத் தவிர்க்க மாற்று படிமுறைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார இடரால் அந்நியச் செலாவணி சீர்குலைந்துள்ளது. இதனால் சிமெந்து உற்பத்தி மற்றும் கருங்கல் உடைத்தல் போன்ற கைத்தொழில்களுக்குப் பயன்படுத்தும் வெடிமருந்துகள் இறக்குமதி தடைப்பட்டுள்ளதால் அவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இதனைப் பயன்படுத்தும் தொழில்துறை நடவடிக்கைகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. இதற்கு குறுகியகால தீர்வாக பாதுகாப்பு அமைச்சின் தலைமீட்டின் கீழ் துரிதமாக வெடிமருந்துகளை இறக்குமதி செய்வதற்கான பொறிமுறைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)



கிண்ணியா கச்சக்கொடித்தீவிலுள்ள சதொச விற்பனை நிலையத்தில் பொருள்கொள்வனவு செய்ய மக்கள் முண்டியடித்து வருகின்றனர். (ய)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் நெருக்கடியால் மின்சார சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியால் மின்சார சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மின்சாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மின்சாரத்துறையை அத்தியாவசிய சேவையாக அறிவித்த போதிலும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் மின்சார சபையினருக்கும் மின்சாரசபை வாகனங்களுக்கும் சில நாள்களாக எரிபொருள் வழங்கப்படுமென உறுதிப்படுத்தவில்லை.

இதனால் ஊழியர்களின் வரவு, மின்விநியோகம், மின்தடைகள் சீர்செய்தல், அலுவலக நடவடிக்கைகள் போன்ற பல செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

இது தொடர்பில் பல தடவைகள் யாழ்.மாவட்டச்செயலருக்குக் கோரிக்கை விடுத்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலை தொடருமாகவிருந்தால் எதிர்வரும் நாள்களில் மின்சார சேவையும் முற்றாக முடங்கும் என்று மேலும் தெரிவித்தனர்.


(ஒ-14)

## எரிபொருள் தட்டுப்பாட்டால்
# பாய்மரப் படகுகளிலேயே கிளிநொச்சியில் மீன்பிடி

கிளிநொச்சி, ஜூலை 7

**எரிபொருள் தட்டுப்பாட்டால் பூநகரி, பளை, கண்டாவளை ஆகிய பிரதேச மீனவர்கள் பண்டையகால தொழில்நுட்பமான பாய்மரப் படகுகளைப் பயன்படுத்தி கடற் தொழிலை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.**





கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் எரிபொருள் இன்மையால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

கிளிநொச்சியில் கடற்றொழிலுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பலரின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதும் இதுவரை எவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு எரிபொருளுக்காகக் காத்திருந்தால் தமது குடும்பங்கள் உணவுக்கே வழியில்லாத நிலையில் பாதிக்கப்படும் என்பதால் இந்த பாய்மரப் படகுத் தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தமது படகுகளில் போர்வைத் துணி மற்றும் பல மான துணியைக் கட்டி கரையோரக் கடற்றொழிலில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

"இதன்மூலம் குறைந்தளவு வருமானத்தை மாத்தரமே பெறமுடியும். அதே வேளை எமது கடலில் இந்திய இழுவைப் படகுகள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன" எனவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ஒ-14-214)

## சாவகச்சேரி நகரசபையின்
# கழிவகற்றும் பணி மீண்டும் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூலை 7

சாவகச்சேரி நகரசபையின் கழிவகற்றும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த முதலாம் திகதி முதல் நகரசபையின் கழிவகற்றும் பணிகள் நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் கைதடி எரிபொருள் நிலையத்தில் 40 லீற்றர் டீசல் நேற்றுமுன்தினம் நகரசபை கழிவகற்றும் வாகனங்களுக்கு வழங்கப்பட்டது. அதனையடுத்து நகரப் பகுதியில் தேக்கமடைந்து காணப்பட்ட கழிவுகள், சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட கழிவுகள் என்பன அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை டீசல் மேலும் விநியோகிக்கப்படும் வரை நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் குறிப்பாக வட்டாரங்களில் கழிவகற்றும் பணிகள் இடம்பெறாது எனவும் அதுவரை குடியிருப்புகளில் சேரும் கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து வைக்குமாறும் சாவகச்சேரி நகரசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-14-9)

## யாழில் டீசல் முடிவடைந்துள்ளதால் திணைக்கள வாகனங்கள் முடக்கம்

யாழிலுள்ள எரிபொருள் நிலையங்களில் டீசல் முடிவடைந்துள்ளதால் பல அரச மற்றும் தனியார் திணைக்களங்களின் வாகனங்கள் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள முடியாமல் முடங்கிக் காணப்படுகின்றன.

இதனால் அரச நிறுவனங்களின் உயரதிகாரிகளும் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட அத்தியாவசிய சேவையை மேற்கொள்ளும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசலை வழங்குவதற்கு யாழ்.மாவட்டச்செயலர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-14-17)

## உலருணவு வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை7

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் 8 ஆம் திருவிழாவான நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு புங்குடுதீவு ஜே/29 கிராம அலுவலர் பிரிவில் வசிப்பவர்களுக்கு உலர் உணவு வழங்கப்படவுள்ளது.

சம்பத் வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் க.மயில்வாகனத்தின் நிதிப் பங்களிப்பில் இந்த உலருணவு வழங்கப்படவுள்ளது.

நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் பிரணவன், ஜே/29 கிராம அலுவலர் பிரியலக்சன், சம்பத்வங்கியின் யாழ்.மாவட்ட பிராந்திய முகாமையாளர் இராசநாயகம் குமணன் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ-14)

## சேதனப் பசளையை ஏலத்தில் கொள்வனவு செய்யப் போட்டி

சாவகச்சேரி, ஜூலை 7

சாவகச்சேரி நகரசபையால் முன்னெடுக்கப்பட்ட பிலிசறுத் திட்டத்தில், உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளை கடந்த திங்கட்கிழமை ஏலத்தில் விநியோகிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினமும் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய கழிவுப் பொருள்களை சேதனப் பசளையாக்கும் திட்டத்தில் பெருமளவு சேதனப் பசளை உற்பத்திசெய்யப்பட்டது.

அதனை ஏலத்தில் விற்பனை செய்தபோது காலபோக நெற்செய்கையாளர்கள், மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை விவசாயிகள் கடும் போட்டிக்கு மத்தியில் கொள்வனவு செய்தனர்.

(ஒ-14-9)

## மன்.பொது மருத்துவமனையில் நாளை குருதிக்கொடை முகாம்

மன்னார், ஜூலை 7

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் விசேட குருதிக்கொடை முகாம், நாளை வெள்ளிக்கிழமை காலை மருத்துவமனையின் குருதி வங்கியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இந்த குருதிக்கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் செந்தூர்பதிராஜா தெரிவித்தார்.

மருத்துவமனையில் O+ மற்றும் B+ வகை குருதிக்கு பெருமளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு ஏனைய வகைக் குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே குருதிக்கொடை செய்ய விரும்புபவர்கள் குறித்த குருதிக்கொடை முகாமில் கலந்துகொள்ளுமாறும் மேலதிக தகவல்களுக்கு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் குருதி வங்கியுடன் தொடர்புகொள்ளுமாறும் மருத்துவர் செந்தூர்பதிராஜா கோரிக்கை முன்வைத்துள்ளார்.

(ஒ-14-56)

## சைக்கிள் திருடிய நபர் மக்களால் மடக்கிப்பிடிப்பு

சாவகச்சேரி, ஜூலை 7

சாவகச்சேரிப் பகுதியில் சைக்கிள் திருடியவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

மட்டுவிலைச் சேர்ந்த ஒருவர் சாவகச்சேரி நவீன சந்தையில் நேற்றுமுன்தினம் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். அங்கிருந்து திரும்பி வரும் போது சைக்கிளை ஒருவர் கொண்டு செல்வதைக் கண்டு சத்தமிட்டுள்ளார். குறித்த நபர் உடனேயே சைக்கிளில் ஏறி ஓடினார். சத்தம் கேட்டு ஒன்றுகூடிய சந்தைப்பகுதி வர்த்தகர்கள் அவரைத் துரத்திப் பிடித்து சாவகச்சேரி பொலிஸ் சாவடியில் ஒப்படைத்தனர்.

(ஒ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வரப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம்





யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நேற்றுப் புதன்கிழமை காலை 6 மணிமுதல் 7 மணி வரை இடம்பெற்றது.

இதன்போது தீபாராதனை, விசேட பூசை என்பன இடம்பெற்று, திருமுறை பாராயணங்களுடன் 108 நடன மாணவிகளின் நிருத்தியாஞ்சலியும், கீத வாத்திய உபசாரங்களுடன் கும்பங்கள் புறப்பட்டு வீதிப்பிரதட்சணமாக வலம் வந்தன. தொடர்ந்து ராஜகோபுர கும்பாபிஷேகம், அனைத்து மூர்த்திகளுக்குமான மஹா கும்பாபிஷேகம் என்பன சிறப்பாக இடம்பெற்றன. (ஓ-14-125)

## பொதுமகனை உதைத்த
# இராணுவ அதிகாரி பணிநீக்கம்

குருநாகல், யக்கஹாபிட்டிய பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமகனைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரியை தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் பணிப்புரையின் பேரில் இது தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த அதிகாரி அனைத்துப் பணிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# பரிந்துரைகளை நிறைவேற்றாத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

## கோப் குழு மீள அவதானம்

கொழும்பு, ஜூலை 7

**கோப் குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களை நிறைவேற்றாத நிறுவனங்களின் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கோப்குழு அவதானம் செலுத்தியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தலைமையில் 4ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில்,

இந்த வருடம் பெப்ரவரி 23ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு விசாரணைகள் ஓர் அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், இலங்கை மத்திய வங்கி, அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, அபிவிருத்தி லொத்தர் சபை, வரையறுக்கப்பட்ட கட்டப்பொருள்கள் கூட்டுத்தாபனம், லிட்ரோ காஸ் லங்கா மற்றும் தனியார் நிறுவனம் உள்ளிட்ட சில நிறுவனங்கள் தொடர்பான தீர்மானம் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்கள் குழு வழங்கிய சில தீர்மானங்களுக்குரிய அறிக்கைகளை இதுவரை குழுவுக்கு சமர்ப்பிக்கவில்லை.



இந்த நிலையில் இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய, இனங்காணப்பட்ட முக்கியமான நிறுவனங்களை மீண்டும் அழைத்து தகுந்த நடவடிக்கை எடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இம்மாதம் 19ஆம் 20ஆம் 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் மத்திய வங்கியின் அரச கடன் மற்றும் நிதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்கள், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர்கள் கோப் குழுவுக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இன்று 7ஆம் திகதி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை கோப் முன்னிலையில் அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை மின்சாரசபையின் மின் உற்பத்தி, கொள்வனவு, விநியோகம் மற்றும் திட்டங்கள் தொடர்பில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் ஆராயப்படவுள்ளது - என்றுள்ளது. (ச-இ)

### பண்ணைக்...

கடற்றொழிலுக்குச் சென்றவர்கள் சடலம் ஒன்று மிதப்பது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார், சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தார். தற்போது சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26-125)

### பக்திபூர்வமாக...

பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டுக் கடந்த 30 ஆம் திகதி பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகின. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிவரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சுவாமிகளுக்கான பூசைகள் நடைபெற்றதுடன், யாகப் பூசைகளும் நடைபெற்றன. நேற்றுப் புதன்கிழமை காலை 9 மணி முதல் 10:30 மணி வரையான உத்தர நட்சத்திரம் சிம்ம லக்கின நன் முகூர்த்த வேளையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்தோடு கேதீச்சர மகாலிங்க பெருமானுக்கு கும்பாபிஷேகம் கோபுர கலசங்களுக்கான புனித நீர் வார்க்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவு பெற்றது. (அ-எ-56)

### கொரோனா...

நாட்டில் கொரோனாத் தொற்றுக் குறைவடைந்திருந்த நிலையில், நீண்டநாள்களாக கொரோனாவுடன் தொடர்புடைய மரணங்கள் நிகழவில்லை. இந்நிலையில் நேற்றுமுன்தினம் பெண் ஒருவர் கொரோனத் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். (அ-எ-இ)

### நிதியமைச்சர்...

பெறக்கூடிய வேலைத் திட்டங்களைத் தாமதப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கருத்துக்களை வெளிப்படுத்தாமல் இருப்பதால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாது. நிதி அமைச்சர் நாட்டைப் பெரும் இடருக்குள் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்.

அவரிடம் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு எந்தத் திட்டமும் இல்லை. டொலரைப் பெறுவதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் நிதியமைச்சர் பதவியில் இருந்து விலகவேண்டும்.

அவரது திட்டமிடல் இன்மை தொடர்பாக நான் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளேன். முடிந்தால் எனது கேள்விகளுக்குப் பதிலளியுங்கள் என்று நான் அவரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். கைகளில் எந்தக் காகிதங்களும் இன்றி அவருடன் பகிரங்க விவாதத்தில் ஈடுபட நான் தயார்.

வெறும் ஆர்ப்பாட்டங்களால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. முறையான திட்டங்களுடன் வீதிகளுக்கு இறங்க வேண்டும். அவ்வாறான ஆர்ப்பட்டங்களை முன்னெடுக்காவிட்டால் இந்த நாடு மேலும் பெரும் பள்ளத்தில் வீழ்த்தப்படும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளும்போது டொலரைப் பெறும் வழிமுறைகள் எழுதப்பட்ட பதாகைகளுடன் வர வேண்டும் என்று கோருகின்றேன் - என்றார்.

தான் அமைச்சராகப் பதவி வகிக்கும் அரசாங்கத்தின் பிரதமரான ரணிலுக்கு எதிரான கருத்துக்களை தம்மிக்க பெரேரா வெளியிட்டுள்ளதால், அரசாங்கத்துள் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதையே காட்டுகின்றது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (எ-இ)

### எரிவாயுத்...

துக்குள் குறைக்க முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த நான்கு வாரங்களில் இலங்கைக்கு 33 ஆயிரம் மெற்றிக்தொன் சமையல் எரிவாயு கிடைக்கும். திட்டமிட்டபடி எரிவாயு இறக்குமதி நடந்தால் நாளாந்தம் ஒரு லட்சத்து 12 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விடுவிக்க முடியும் என்று நம்புகின்றேன்.

குடியிருப்பாளர்களுக்குச் சமாந்தரமாக வெதுப்பகங்கள், உணவகங்கள் மற்றும் சிறு வியாபாரிகளுக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விடுவிக்கப்படும். அடுத்த 4 மாதங்களுக்கான சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

### வாகனத்துக்குள்...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. யசோதரன் ஜாக்சனா (வயது -7) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். வீடுகளுக்குத் தண்ணீர் விநியோகிக்கும் தண்ணீர் பவுஸர் மீது ஏறி விளையாடிய சிறுமி தவறி வீழ்ந்தபோது வாகனத்துக்குள் சிக்குண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில், சிறுமியின் இறப்புக்கு வாகனத்தில் சிக்கி நசியுண்டமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் வருட நீங்கா நினைவில்



## அமரர் விநாயகமூர்த்தி பரமேஸ்வரி

மலர்வு 06.02.1950 — உதிர்வு 19.06.2021

**திதி: நவமி (07.07.2022)**

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எமைவிட்டு
சென்றதேனோ!
கருணை நிறைந்த உங்கள் முகம் காண
கவலையுடன் தேடுகின்றோம்
இறையடி தொண்டு செய்ததால் தானே
இறைவன் தங்களை தன்னோடு கொண்டு சென்றான்
துயர் உற்ற வேளையில் எம் துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர் பகிரவோ எம்மோடு
தாயே! நீங்கள் இல்லை...!
ஆண்டொன்று ஆனதம்மா உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
அம்மா உங்கள் நீங்காத
நினைவலைகளுடன்
இறைவனைக் கேட்கின்றோம்
கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒரு கருவறை
தந்தால் எம் அன்னையின்
வயிற்றில் உதிக்கும் வரத்தை தந்திடுவாய்!

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## பதவி வெற்றிடம் -களஞ்சிய (கிளை) முகாமையாளர் குறியீட்டு இலக்கம் 208/14

மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01. சம்பள அளவுத்திட்டம் 208/14
15960 – 135X10 – 145X10 – 18760.00
(அத்துடன் கூ.ஊ. ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்)

02. தகைமைகள்-
   01. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 15ல் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 02 வருட அனுபவம் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 16ல் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 04 வருட அனுபவம் குறையாத அனுபவம்.

   அல்லது

   02. கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி /க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ் மொழி கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி
   03. வயது 18-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

03. பொது
   1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்துவதுடன் ஆதனப் பிணை செலுத்துதல் வேண்டும்
   2. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் **பொது முகாமையாளர் நானாட்டான் பகுதி ப.நோ.கூ. சங்கம் பிரதான வீதி முருங்கன்** என்னும் முகவரிக்கு எதிர்வரும் **20.07.2022** திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

பொது முகாமையாளர்
நானாட்டான் பகுதி.
ப.நோ.கூ.சங்கம்
முருங்கன்.

## பதவி வெற்றிடம் - விற்பனை உதவியாளர் குறியீட்டு இலக்கம் 308/17

மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன

01. சம்பள அளவுத்திட்டம் 308/17
14725 -115X10 - 130X10-17175.00
(அத்துடன் கூ.ஊ.ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்)

02. தகைமைகள்-
   01. கூட்டுறவு ஊழியர் கனிஸ்ர பத்திரம் / 8 ஆம் தர கல்வி சான்றிதழ்
   02. வயது 18-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
   03. பொது
      1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு் செலுத்த வேண்டும்
      2. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ் களின் பிரதியுடன் **பொது முகாமையாளர் நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம் பிரதான வீதி முருங்கன்** என்னும் முகவரிக்கு எதிர்வரும் **20.07.2022** திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

பொது முகாமையாளர்
நானாட்டான் பகுதி.
ப.நோ.கூ.சங்கம்
முருங்கன்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 04 - 1936



மறைவு 02 - 07 - 2022

திருமதி

## மரியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை (மரியக்குட்டி)

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும், இளவாலை, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை கடந்த (02.07.2022) சனிக்கிழமை இளவாலையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை சுவானப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், பமிலா (இலங்கை), மரியநாயகி (ஜெமிலா - கனடா), பிலிப்ராசநாயகம் (ஜேர்மனி), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ராஜ்குமார் (அமெரிக்கா), விஜயகுமார் (கனடா), பிறிணித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீபன், யூட் றஞ்சன், புஸ்பமலர் (பவா), தர்சினி, நிஷாந்தி, விஜித்தா, தேவராசா ஆகியோரின் அன்பு மாமியும், திரேஸ், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சூசானம், மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசமணி, புனிதா, காலஞ்சென்றவர்களான ராசதுரை, அன்னம்மா, மரியம்மா (சாரம்மா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நில்மன்ராஜ் - பற்றிமா, பசில்ராஜ், றொபின்சன், ரஜீவன், றெக்ஸ்சன், எல்வர், ஜெறி, அகில், ஜெசிக்கா, ஜெனிவர், ஜெனுஷா, ஜேம்சன், அனுஷன், கிறிஸ்ரீனா, தபிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நயோமியின் பாசமிகு பூட்டியும், கவுட்டறி, பேட்டா, வதனி, லக்கி, சூட்டி, ஜான்சன், யூட்டின், டொடா ஆகியோரின் ஆசை பெரியம்மாவும், அஜந்தன், அனுஷா, அலெக்ஸ், அன்ரனி பொன்னார், ராசா, பேபி, றூபி, சந்திரன், துரை சறோ, ரவி, றதி ஆகியோரின் ஆசை மாமியும் நயோமியின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.07.2022) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு வீட்டில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நில்மன்ராஜ் - 076 577 0257
பமிலா - 942 1790 1380
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் செல்வராணி சகாதேவன்

(1952 – 2022)

(ஓய்வுநிலை அதிபர் யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)



அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.07.2022) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது என்பதனை அறியத் தருவதுடன், கடந்த 07.06.2022 அன்னாரின் திடீர்மறைவால் துயருற்றிருந்த எங்களுக்கு பக்கபலமாக நின்ற உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி, சமூகவலைத்தளங்கள் மூலமாக எமக்கு ஆறுதல் கூறி உதவியவர்களுக்கும், பத்திரிகை அறிவித்தல், பதாகைகள், மலர்வளையங்கள் மற்றும் மலர்மாலைகள் வழங்கிய அனைவருக்கும் வைத்தியசாலையில் அவரின் நிலையை சரியாக புரியவைத்து ஆறுதற்படுத்திய வைத்திய நண்பர்களுக்கும் மற்றும் பராமரித்த ஏனைய வைத்தியர்கள், வைத்திய தாதியர்க்கும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை சார்பில் பாடசாலைக் கொடியை அவரின் புகழுடலுக்கு அணிவித்து இறுதிமரியாதை செலுத்திய அதிபர், பாடசாலைச்சமூகத்தினர் மற்றும் மழலைகளுக்கும் அஞ்சலி உரைகளை வழங்கிய கல்விசார் உத்தியோகத்தர்கள், நண்பர்களுக்கும் இறுதி ஊர்வலயத்தில் முழுமையான பங்கெடுத்த பரீட்சைகள் கிளை நண்பர்கள், குடும்ப நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும், ஏனைய பல வழிகளிலும் உதவிபுரிந்த பிரதேச செயலக நண்பர்களுக்கும் ஏனைய நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பாக இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்

குடும்பத்தினர்

"செல்வநிலாவகம்"
47, புகையிரத நிலைய வீதி, கொக்குவில்.

(CS 45435) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடப்பட்ட சைக்கிள் மீட்பு இளைஞர் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 7

பொன்னாலையைச் சேர்ந்த ஒருவரின் சைக்கிள் திருட்டுப் போயிருந்த நிலையில், அந்த சைக்கிள் நேற்றுப் புதன் கிழமை மதியம் சங்கானையில் மீட்கப்பட்டது. அதை விற்பனைக்காக வைத்திருந்த இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.


கடந்த சில தினங்களுக்கு முன்பாக மூளாய் வேரம் அக்கினிவைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்வையிடச் சென்ற பொன்னாலை தெற்கைச் சேர்ந்த ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், அந்த சைக்கிளை விற்பனை செய்வதற்காக சமூக வலைத்தளத்தில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதைப் பார்த்த உரிமையாளர் அந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அதை வாங்குவது போன்று விலைகளையும் தீர்மானித்து அவர்களுடன் உரையாடியதை தொடர்ந்து நேற்றுக் காலை சங்கானையில் சந்திக்கத் தீர்மானிக்கப்பட்டது. நேற்றுக்காலை அங்கு சென்ற உரிமையாளரும், அவரது உறவினர்களும் சங்கானையில் சென்று காத்திருந்தனர். முற்பகல் 11.20 மணியளவில் சைக்கிளை இருவர் கொண்டு வந்தனர். சங்கானை பழைய மக்கள் வங்கிக்கு அருகாமையில் வைத்து அவர்கள் இருவரும் தடுத்து நிறுத்தப்பட்டு சைக்கிளும் மீட்கப்பட்டது. அவர்களிடம் விசாரணை நடத்தியபோது, தாம் அராலியை சேர்ந்தவர்கள் எனவும் மூளாய் அக்கினி வைரவர் ஆலய இசை நிகழ்ச்சியின்போது இரவு 1.30 மணியளவில் ஒருவர் இந்தச் சைக்கிளை 8 ஆயிரம் ரூபாவுக்கு தமக்கு விற்பனை செய்தார் எனவும் அவர் யார் என தமக்குத் தெரியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சைக்கிளை வாங்கிய பிரதான நபரைக் கைது செய்தனர். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-125)

# அதி நவீன ஸ்கானருடன் முல்லையில் இருவர் கைது



முல்லைத்தீவு, ஜூலை 7

முல்லைத்தீவு நகர் பகுதியில் இருவர் அதி நவீன ஸ்கானர் இயந்திரத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் கடந்த திங்கட்கிழமை அதிகாலை கொழும்பில் இருந்து புதுக்குடியிருப்பு வந்துள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், இவர்கள் கடந்த திங்கட்கிழமை இரவு முல்லைத்தீவு நோக்கி பஸ்ஸில் பயணித்தபோது கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்ட ஸ்கானர் இயந்திரம் மூலம் மாணிக்கக் கல், தங்கம் என்பவற்றை அடையாளம் காணமுடியும் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது என்று குறிப்பிட்ட பொலிஸார் விசாரணைகளின் பின்னர் இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்தனர். (எ-19)

# 3,600 லீற். ம.எண்ணெய் நாச்சிக்குடாவில் மீட்பு



கிளிநொச்சி, ஜூலை 7


நாச்சிக்குடாவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டுள்ளது என்று முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-113)

நாய்க்குட்டி விற்பனைக்கு
11 மாதம் நிரம்பிய
ரொட்வீலர் இன நாய்க்குட்டி
விற்பனைக்குண்டு.
077 659 0606

## மரண அறிவித்தல்



### திரு.பொன்னம்பலம் சிவநேசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவநேசன் அவர்கள் நேற்று (06.07.2022) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகதாசன் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்மினியின் அன்புக் கணவரும், கணேஷாயினி (USA), கணேந்திரா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பிரபாகரன் (USA) மற்றும் சுபத்திரா (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜாழன், ஜனனி, டஸ்வினி, அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனும், பாலகிருஸ்னண் காலஞ்சென்ற கணேஸ்வரன், குமரேசன், நாகேஸ்வரி, மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: [illegible]
077 777 4386

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் கணேஷநாதன்

தொல்புரத்தினை பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை வாழ்விடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணேஷநாதன் நேற்று (06.07.2022) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், கணேஷ்வரியின் அன்பு கணவனும், காலஞ்சென்ற செந்தில்செல்வர் மற்றும் சக்திவடிவேல், விஜயலக்ஷ்மி, காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், ஆனந்தகிருஷ்ணன் (விரிவுரையாளர், கணினி அலகு, யாழ்.பல்கலைக்கழகம்), கணேஷவேல் (பொறியியலாளர்,UK), ஸ்ரீ விசாகன் (பொறியியலாளர்,UK) ஆகியோரின் அன்பு தந்தையும், தர்மாம்பிகை (கணக்காளர், பிரதேச செயலகம், கோப்பாய்), மகிமா (பொறியியலாளர் UK), நீரஜா (பொறியியலாளர்,UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிலாஷ் (யாழ்.இந்து கல்லூரி), இலக்கியா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஆதித்தியன் (UK), தீரன் (UK), சிவாதி (UK) ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2022) வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"[illegible]வாசா",
தொட்டிலடி, சங்கானை. 0776056765 தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமைகளை...

கொழும்பில் நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள், மூத்த சட்டத்தரணிகள் இணைந்து இந்தக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

"ஜூலை 9 காலை 9 மணி கொழும்பு" என்ற தொனிப்பொருளில் இந்த ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஸ்ரீநாத் பெரேரா, சரத் ஜயமான்ன, உபுல் ஜயசூரிய ஆகியோரும், மூத்த சட்டத்தரணிகளான உபுல் குமாரபெரும, நுவன் போப்பகே உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தனர்.

ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மூத்த சட்டத்தரணி நுவான் போப்பகே, தற்போதைய சூழ்நிலையில் அதிகாரத்தைக் கைவிட்டால் தாங்கள் அழிக்கப்படுவோம் என்பதை ராஜபக்ச குடும்பத்தினர் நன்கறிவார்கள். அதனால் நாம் அனைவரும் இணைந்து அவர்களைத் துரத்தியடிப்போம் என்று தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் நிலையில் இருந்து, மரணிக்கும் நிலை வந்தால்கூட அடுத்த இரு நாள்களாவது தாங்கள் நிலைத்திருக்கக் கூடிய மீயர் சட்டங்களை ராஜபக்சக்கள் கொண்டுவருவார்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென்று தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி ஜயமான்ன, தற்போதைய அரசாங்கத்தில் நியாயத்துவம் இல்லாமல் போய்விட்டது. மக்களின் உரிமைகள் மீறப்படுகின்றமைக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு உங்கள் உரிமைகளைப் பயன்படுத்துங்கள். உங்களுடன் நாம் இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும, நாம் மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். இங்கு அனைத்தும் ஊழல் மற்றும் குற்றங்களின் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது. அவர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அனைத்தையும் செய்கின்றனர். நாம் அனைவரும் ஒன்றிணைவதன் மூலமே அவர்களைத் தோற்கடிக்க முடியும் - என்றார். (அ-எ-இ)

## அனைத்துக்...

நிலையில் சாதகமான சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்களிப்புடன், அனைத்துக் கட்சி அரசாங்கம் தொடர்பான அரசியல் மட்டத்திலான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுகின்றது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சில், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சுதந்திரக்கட்சி, 43ஆம் படையணி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான நகர்வுகளை முன்னெடுப்பதற்கு குழுவொன்றை அமைப்பதற்கு அதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்சி தலைவர்களை உள்ளடக்கிய வகையில் அரசியல் நடவடிக்கை மற்றும் பொருளாதார விவகார குழுவொன்றை அமைப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் கட்சி அரசாங்கத்துக்கான முதல் சுற்று பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் அந்தக் கட்சி பங்கேற்கவில்லை. நேற்றைய சந்திப்பிலும் அந்தக்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை.

எனினும், உரிய வேலைத்திட்டத்துடன், தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு, அனைத்துக் கட்சி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படுமானால் வெளியில் இருந்து கொண்டு அதற்கு ஆதரவு வழங்கத் தயார் என அநுரகுமார திஸாநாயக்க கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அறிவித்தார்.

அதேவேளை, எதிரணிகளின் பங்களிப்புடன் அமையும் சர்வகட்சி அரசுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள் எனவும், இலகுவில் 113 பெரும்பான்மையை திரட்டக்கூடியதாக இருக்கும் எனவும் எதிரணி உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டனர். (எ-இ)

## மக்கள் நலன்...

இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டாமென்று யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காரைநகரில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சிலர் நேற்று குழப்பங்களை ஏற்படுத்த முயன்றமை தொடர்பிலேயே யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாட்டால் யாழ்ப்பாணத்துக்கான பொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளது. முன்னர் தினமும் 100 லொறிகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு தெற்கில் இருந்து பொருள்கள் கொண்டுவரப்பட்டன. அதற்காக கொழும்பு சென்று வருவதற்கு ஒரு லொறிக்கு 250 லீற்றர் டீசல் தேவைப்பட்டது. தற்போது டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், பொருள்களை யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குக் கொண்டுவருவது தடைப்பட்டுள்ளது. அதனால் பொருள்களுக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இந்த இக்கட்டான நிலைமையைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் மாற்று வழியொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியிருந்தது.

காரைநகரிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையம் காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தால் நிர்வகிக்கப்படும் நிலையில், நிதிப் பற்றாக்குறை காரணமாக டீசல் கொள்வனவை அந்த எரிபொருள் நிரப்பு நிலையம் நிறுத்தியிருந்தது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், காரைநகர் பிரதேச செயலர், காரைநகர் ப.நோ.கூ. சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாடிய யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் டீசல் கொள்வனவுக்காக தங்களது நிதியை வழங்கியது. 35 லட்சம் ரூபா நிதி யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தால் வழங்கப்பட்டதை அடுத்து, 6 ஆயிரத்து 600 லீற்றர் டீசல் கொள்வனவு செய்யப்பட்டது. அதில் ஆயிரம் லீற்றர் டீசல் மாவட்டச் செயலகத்தின் நெறிப்படுத்தலில் அரச செயலகங்களுக்கும், ஆயிரத்து 600 லீற்றர் டீசல் காரைநகர் பிரதேச மக்களுக்கும் மிகுதியாகவுள்ள 4 ஆயிரம் லீற்றர் [illegible] பொருள்களை [illegible] களுக்கும் வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவை 16 லொறிகளுக்கு மட்டுமே வழங்கப் போதுமானதாக இருக்கும் நிலையில், ஒவ்வொரு முறையும் டீசல் கொண்டுவரப்படும்போது சுழற்சி முறையில் லொறிகள் கொள்வனவுக்காக அனுப்பப்படும்.

நேற்றுக்காலை முதற்கட்டமாக எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு டீசல் கொண்டு வரப்பட்டிருந்தபோதும், எரிபொருள் நிரப்பு நிலையத்திலுள்ள பம்பி செயலிழந்ததால் டீசல் வழங்கப்படவில்லை. பம்பியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு டீசல் கொண்டுவரப்படுவதை அறிந்து நேற்று அங்கு வந்த சிலர், குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர். குறிப்பிட்ட தரப்பினருக்கு மட்டும் டீசல் வழங்க முடியாது என்று அவர்கள் முரண்பட்டுள்ளனர். இவ்வாறு ஏற்படுத்தும் குழப்பங்கள், ஒட்டுமொத்த மக்களின் உணவுத் தேவையைக் கருத்திற்கொண்டு எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளைப் பாதிக்கும்.

தற்போதுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டு, யாழ்ப்பாண மாவட்ட மக்களின் உணவுத் தேவை கருதி எடுத்துள்ள நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்கவேண்டாம் - என்று யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ-5)

## தென்னை...

(வயது-65) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் 5 பிள்ளைகளின் தந்தையாவார்.

கடந்த முதலாம் திகதி இந்தச் சம்பவம் நடந்துள்ளது. ஏணி வைத்து தென்னை மரத்தில் ஏறியபோதே இவர் தவறி வீழ்ந்துள்ளார்.

இவர் உடனடியாக மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த இவர், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## "நான்ரெடி"....

அநுரகுமார திஸாநாயக்க நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவின் சவாலை நான் ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமானால் ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலக வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:- ஜே.வி.பி. இதைத் தனியாகச் செய்வதற்கு விரும்பவில்லை. இந்த நோக்கத்துக்கு இலங்கை மக்களும், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் ஆதரவளிப்பார்கள் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம்.

நானோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவோ நீண்டகாலம் பிரதமர் பதவியில் நீடிக்க முடியாது. அதனால் குறுகிய காலத்துக்குள் நாட்டின் நிலைமையை ஸ்திரப்படுத்த வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வைக் காண்பதன் மூலமே இதைச் செய்ய வேண்டும்.

அதன்பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி மக்களின் ஆணையுடன் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கான முக்கியமான விடயங்களுக்குத் தீர்வு காண புதிய அரசாங்கத்தால் மட்டுமே முடியும்.

தற்போதைய நெருக்கடியை ஆள்களை மற்றுவதன் மூலமோ அல்லது பதவிகளை மாற்றுவதன் மூலமோ தீர்க்க முடியாது. முக்கியமாக மக்களின் ஆதரவை இழந்த அரசாங்கத்தால் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது - என்றார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 6 மாதங்களுக்குள் நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி முன்வைக்குமானால் தான் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்குத் தயார் என்று சவால் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-எ-இ)

## கோத்தாபய...

ஈடுபட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட 11 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு ஹிருணிகா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அங்கிருந்த பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அந்தப் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஒன்றுசேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் போராட்டக்காரர்கள் நுழைய முற்பட்டபோது, பொலிஸார் அவர்களை நோக்கி நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைத் தாக்குதலை நடத்தினர். அதனால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலைமை நிலவியது.

பொலிஸாரின் கண்ணீர்ப் புகைத் தாக்குதலால் அந்தப் பகுதியில் வீதியில் செல்லும் வாகனங்களில் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

கைதுசெய்யப்பட்ட ஹிருணிகா உள்ளிட்ட 11 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டிருந்த போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை- ஹிருணிகா பிரேமச்சந்திர குழுவினர் கைதுசெய்யப்பட்டதும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உடனடியாக அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்க முன்வந்தது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் சட்டத்தரணிகளுடன் நேரடியாகப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தேவையான சட்ட உதவிகளை மேற்கொண்டனர்.

அதேவேளை, தற்போதைய அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராகக் கொழும்பில் வேறு சில இடங்களிலும் நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நாடாளுமன்றத்துக்கு அருகிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (அ-எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்த கன்னிமார் ஆலயத்துக்கு

# தீர்த்தம் எடுப்பதற்கு இராணுவத்தினர் தடை

## போராட்டத்தை அடுத்து அகற்றப்பட்டது முகாம்

முல்லைத்தீவு, ஜுலை 7

**முல்லைத்தீவு, வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுக்கு இராணுவத்தினர் தடை ஏற்படுத்தியதால் கடந்த திங்கட்கிழமை அங்கு பதற்றம் ஏற்பட்டது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை மாலை ஐந்து முப்பது மணி அளவில் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுப்பதற்காக முல்லைதீவு பெருங்கடலை நோக்கி அடியவர்கள் சென்றனர்.

தீர்த்தக்கரை செல்லும் வீதியை இராணுவத்தினர் மறித்து வேறு வழியால் செல்லுமாறு தெரிவித்துள்ளனர். இதுவரை காலமும் குறித்த வழியால் தீர்த்தம் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் மட்டும், இராணுவத்தினர் அந்த வீதியூடாகச் செல்ல அனுமதி மறுத்திருந்த நிலையில் மாற்று வீதியூடாகத் தீர்த்தம் எடுக்க அடியவர்கள் சென்றிருந்தனர்.

வழமையை மாற்றியதால் தங்களுக்கு துன்பியல் நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்று நம்பும் மக்கள் இம்முறை வழமையான வீதியூடாக தீர்த்தம் எடுக்கச் செல்ல தீர்மானித் ததுடன், மூன்று நாள்களுக்கு முன்னர் இராணுவ முகாமிலுள்ளவர்களுடன் ஆலய நிர்வாகத்தினர் கலந்து ரையாடியதுடன், எழுத்துமூல ஆவணம் ஒன்றையும் கையளித்திருந்தனர். கடந்த திங்கட்கிழமை தீர்த்தம் எடுக்கச் சென்றபோது இராணுவத்தினர் வீதியூடாகச் செல்ல அனு மதி மறுத்தனர். இராணுவ உயர்பீடங்கள் தீர்த்தம் எடுப்பதற்கு அனுமதி வழங்கவில்லை என்று இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தெரி வித்துள்ளார். பலமணி நேரமாக காத்திருந்தபோதும் இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்ததால், இறுதியில் மாற்றுப்பாதை ஊடாகவே தீர்த்தம் எடுக்கச் செல்ல நேர்ந்தது.

இந்தச் சம்பவத்தால் கொதிப்படைந்த பிரதேச மக்கள், முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் உள்ள சப்த கன்னிமார் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் போராட்டத்தை அடுத்து அங்கு ஆயுதங்களுடன் இராணுவத்தினர் குவிக்கப்பட்டதால் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

ஆலயக் கடமைகளுக்கு ஒத்துழைக்காத இராணுவம், ஆலயக் காணியில் இருந்து வெளியேற வேண்டும் என்று மக்கள் வலியுறுத்தினர். மக்களின் பெரும் எதிர்ப்பை அடுத்து, அந்தக் காணியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுவர் என்று உறுதியளிக்கப்பட்டது. இராணுவத்தினர் அந்தக் காணியில் இருந்து தங்கள் பொருள்களை அகற்றும் நடவடிக்கையும் ஆரம்பித்துள்ளனர் என்று மக்கள் தெரிவித்தனர்.

அந்தக் காணியை உடனடியாக எல்லைப்படுத்தி, சப்த கன்னிமார் ஆலயத்துக்குரிய காணி என்ற அடையாளப் பலகையையும் பொது மக்கள் நட்டனர். தீர்த்தம் எடுக்கச் செல்லும் வீதியின் பெயரை இராணுவ முகாம் வீதி என்று இராணுவத்தினர் மாற்றியுள்ள நிலையில், அந்தப் பெயரையும் மாற்ற வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தினர். (எ-19)

## எரிபொருளை எடுத்துவர ரூ. 700 மில்லியன் தரகுப்பணம்

### அரசாங்கம் இணக்கம் என ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 7

இலங்கைக்கு எடுத்து வர எதிர்பார்க்கப்படும் 40 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளுக்காக 700 மில்லியன் ரூபா தரகுப் பணத்தை வழங்க அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட ருவிற்றர் பதிவில்,

சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்த நிலையில் நாட்டுக்கு எடுத்துவரப்படவுள்ள 40 ஆயிரம் மெற்றிக்தொன் எரி பொருளுக்காக மோசடிக்காரர்களுக்கும் திருடர்க ளுக்கும் 700 மில்லியன் ரூபாவை தரகுப் பணமாக வழங்க அரசாங்கம் முனைந்துள்ளது.

எரிபொருள் விடயங்கள் குறித்து கலந்துரையாட கோப் குழுவுக்கு அதிகாரிகள் அழைக்கப்பட்டபோதும் அவர்கள் பிரசன்னமாகவில்லை - என்றுள்ளது.

இதுகுறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளை கோப் குழு சந்திக்கும் வகையில் நேரத்தை மாற்றியமைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

## கசிப்பு, கோடாவுடன் இருவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஜுலை 7

வட்டுக்கோட்டைப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சுழிபுரத்தில் இருவேறு பகுதிகளில் கசிப்பு மற்றும் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம் மத்திப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் 68 வயதான மூதாட்டியைக் கைது செய்தனர். அவரிடமிருந்து 5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

அத்துடன் அதே பகுதியில் வேறொரு இடத்தில் கோடாவை உடைமையில் வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலுக்கமைய 41 வயதான குடும்பஸ்தரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து 95 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது.

அதனையடுத்து இரு சந்தேகநபர்களுக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஓ-14,125)

### விலங்கு உணவு விலையுர்வு

## 90வீத பண்ணைகள் மூடப்படும் அபாயம்!

கொழும்பு, ஜுலை 7

நாடு முழுவதிலுமுள்ள சிறு மற்றும் நடுத்தர விலங்குப் பண்ணைகளில் 90 சதவீதத்துக்கும் அதிகமானவை மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என விலங்கு பண்ணை பிரதிநிதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் எரி பொருள் தட்டுப்பாட்டால் விலங்கு உணவுகளின் விலை இரட்டிப்பாகியுள்ளது.

கடந்த காலத்தில் 3ஆயிரத்து 200 ரூபாவாக காணப்பட்ட கோழித்தீவனப் பொதி தற்போது 13 ஆயிரம் ரூபா வரையில் அதிகரித்துள்ளது.

இதனால் 4 ஆயிரத்துக்கும் அதிகமான விலங்குப் பண்ணையாளர்கள் இந்த மோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதால் சிறு மற்றும் நடுத்தர விலங்குப் பண்ணைகள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## பெற்றோல் கொள்வனவுக்காக கர்ப்பிணியான ஆண் பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 7

கர்ப்பிணிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு பெற்றோல் வரிசையில் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நின்று எரிபொருள் கொள்வனவு செய்த சம்பவம் யாழ்ப்பாணம் நகர எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்களுக்கு நேற்றுமுன்தினம் எரிபொருள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, ஆண் பொலிஸ் அலுவலர்கள் உட்பட சுமார் 20 பொலிஸார் வரிசைகளை முந்திச்சென்று தமக்கு எரிபொருள் பெறுவதற்கு முயற்சித்துள்ளனர். இதையடுத்து பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியதை அடுத்து மேற்படி பொலிஸ் அலுவலர்கள் கர்ப்பிணிகளுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட சிறப்பு வரிசையில் நின்று எரிபொருளைப் பெற்றுக்கொண்டனர். (ம-27)

## ஹெரோய்னுடன் பெண் கைது

கொழும்பு, ஜுலை 7

டுபாய் நாட்டுடன் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத்த பெண்ணொருவர் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.திட்டமிட்ட குற்றச் செயல்களைப் புரியும் குழுவின் உறுப்பினரான குறித்த 33 வயதான பெண் பொரலஸ்கமுவ, பெப்பிலியான பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 20 கிரோம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

**வீடு வாடகைக்கு**

புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலில் பகுதியள விலான வீடு சகலவசதிகளுடன் பெண்கள் மட்டும் உள்ள குடும்பம் விரும்பத்தக்கது. பாதுகாப்பான சூழல்

076 443 3693



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.